SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue:9, Pages:56
April-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
ஏப்ரல் 2023,
விலை ரூ.20/-



ஒண்டிமிட்டா
ஸ்ரீசீதா சமேத ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி
திருக்கல்யாணம் 05-04-2023

11-02-2023 முதல் 19-02-2023 வரை நடைபெற்ற
ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி
பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்






11-02-2023 முதல்
20-02-2023 வரை
நடைபெற்ற
திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்





*யதி$_3$ மாமப்ரதீகாரம் அசஸ்த்ரம் சஸ்த்ரபாணய:।*
*த$_4$ார்தராஷ்ட்ரா ரணே ஹந்யுஸ் தந்மே க்ஷேமதரம் ப$_4$வேத்॥*

**ஆயுதமின்றியும், எதிர்த்துப் போரிடாமலும் இருக்கின்ற என்னைக் கையில் ஆயுதம் தாங்கிய திருதராஷ்டிர குமாரர்கள் போரில் வென்றாலும், அதுவும் எனக்கு அதிக நன்மை பயப்பதாகவே ஆகிவிடும்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–46*

*ஓராண்வழியா யுபதேசித்தார் முன்னோர்*
*ஏராரெதிராசரின்னருளால் பாருலகில்*
*ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று*
*பேசி வரம்பறுத்தார்பின்*

**உடையவருக்கு முன்னேயிருந்த ஆசாரியர்கள் ஓரொருவர் வழியாக அர்த்த விசேஷங்களை உபதேசித்துப் போந்தார்கள். அவர்களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எம்பெருமானார் தமது பரம கிருபையினாலே, “ஆரியர்களே!” என்று தம் அடியார்களை விளித்து, நீங்கள் இப்பூமண்டலத்தில் அர்த்தங்கள் கேட்க ஆசையுடையார் எல்லார்க்கும் உபதேசியுங்கள் என்று நியமித்து, முன்னோர்கள் வைத்துக்கொண்டிருந்த ஒரு வரம்பைப் போக்கி விட்டார்**

*- உபதேசரத்தினமாலை 37*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!**
**தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"**
**சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!**

உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்
மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)



.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

இவ்விலைமாற்றம் செப்டம்பர் 2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
இவ்விலை மாற்றம் புதிதாகக்கட்டும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

**ஏப்ரல் 2023**

மலர் 02 இதழ் 09



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. A.V. தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
*ஆசிரியர் :*
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
*அச்சிடுபவர் :*
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

**நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| **சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை: வராகவதாரம்** - *முனைவர் பிரியா கிருஷ்ணன், சென்னை.* | 7 |
| **சீதாராமர் திருக்கல்யாணம்** -*திருமதி டி.கே.லக்ஷ்மி கிருஷ்ண ஸ்வாமி, திருப்பதி.* | 9 |
| **திருவாய்மொழியில் இராமாநுஜரின் நிர்வாகம்** - *திரு.கிடாம்பி நாராயணன், திருவல்லிக்கேணி.* | 12 |
| **ஜோதிட சாஸ்திரம் : செவ்வாய்** - *முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை.* | 15 |
| **கங்கா புஷ்கரம்** - *திருமதி டி.எஸ்.ராஜலக்ஷ்மி, கேரளா.* | 18 |
| **அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: துரோணாச்சாரியார்** - *திரு.எஸ்.ஸ்ரீதுரை, சென்னை.* | 22 |
| **ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்** - *டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.* | 24 |
| **அக்ஷய திருதியை** -*முனைவர் பா.காயத்ரி, சென்னை.* | 26 |
| **திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் வேங்கடவனைப் பாடினால் பாவங்கள் பறக்கும் புண்ணியங்கள் சிறக்கும்** -*பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* | 31 |
| **108 திவ்யதேச வைபவம் : திருக்கச்சி** - *உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.* | 35 |
| **ஆதிசங்கர பகவத் பாதாள்** - *திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்.* | 38 |
| **அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : திருமாலையாண்டான்** - *ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.* | 41 |
| **ஆயுர்வேதம் : கோடைக்கால மருத்துவம்** - *திருமதி வி. உஷா, திருப்பதி.* | 44 |
| **நீதிக்கதை : நம்பிக்கை** - *செல்வி எம்.ஏ.நிவேதா, அரவக்குறிச்சிப்பட்டி.* | 46 |
| **ராசிபலன்கள் : ஏப்ரல் 2023** - *டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.* | 47 |
| **சித்திரக்கதை : பகிரதனின் விடா முயற்சி** | 52 |

**அட்டைப்பட விளக்கம்**

*முன்னட்டை : ஸ்ரீசீதா சமேத ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, ஒண்டிமிட்டா.*
*பின்னட்டை : கங்கா ஆரத்தி (சித்திரம்).*

# ஜல தேவதைக்கு வணக்கம்!



இவ்வுலக உயிர்கள் அனைத்திற்கும் இன்றியமையாததாகத் திகழ்வது தண்ணீர் எனும் அமிர்தம் ஆகும். இதனை, வள்ளுவப் பெருந்தகையும் *''நீர் இன்று அமையாது உலகு''* என்கிறார். அத்தண்ணீரானது நதிகளின் வாயிலாக மனித வாழ்க்கைக்கு இணைக்கப்பட்டுள்ளது. மக்களின் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், பொருளாதார நிலை, வளர்ச்சி அனைத்தும் நதி நீரை ஒட்டியே அமைந்துள்ளது. அதனால்தான் மனிதன் தன் வாழ்விற்கு அடிப்படையான நதிகளையும், நீர் ஆதாரங்களையும் இயற்கை தெய்வங்களாக வழிபட்டு வருகின்றான். நம் சனாதன தர்மத்தில் நதிகளுக்கு சிறப்பு இடமுமுண்டு.

நம் நாட்டில் பல நதிகள் இருந்தாலும் முக்கியமாக வாழ்க்கையில் ஒரு முறையேனும் புனிதநீராட வேண்டும் என எண்ணுவது கங்கை நதியிலேயே ஆகும். இந்தியர்களின் வாழ்வியலோடு கங்கையும் ஒன்றி உள்ளது. சனாதன தர்மத்தின் உயிர்நாடியாக விளங்கும் கங்கையால்தான் இந்தியா இவ்வளவு புகழ் பெற்றது. நம் பாரத தேசத்தின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு, கங்கையை "இந்தியர்களின் ஆன்மா" என்று வர்ணித்துள்ளார். கங்கை நதி என்று கூறியவுடனே இருகைகளையும் தூக்கி வணங்குபவர்களும் உண்டு. கங்கையில் புனித நீராடல் என்பதே ஒரு பரவசமாகும். மற்ற நதிகளின் தண்ணீர் வீட்டில் உள்ளதோ, இல்லையோ? ஆனால், எவராவது காசி புனிதப் பயணம் சென்று வந்து கங்கை நதித் தண்ணீர் அளித்தால் அதனை புனிதமாகக் கருதி பூஜை அறையில் வைத்து வணங்குவோம். மிகவும் புனிதமானவற்றைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால் கங்கை மிகவும் புனிதமானவள் என்பர். கங்கையின் தொடர்பின்றி எந்த காவியமும், புராணமும் இல்லை என்றே கூறலாம். கங்கா ஸ்நானம், சம்ப்ரோக்ஷணம், தரிசனம், ஸ்மரணம், கங்கா நாமம் இவை எல்லாம் பெரிதாகப் போற்றப்படுவன.

சங்கராசாரியார் தம் பஜகோவிந்தத்தில் *"பகவத்கீதா கிஞ்சிததீதா கங்காஜல லவகணீகாபீதா! ஸக்ருதபி யேன முராரி ஸமர்சா க்ரியதே யமேன ந சர்சா!"* என்கிறார். அதாவது சிறிதளவாவது கீதையைப் படித்து, ஒரு துளி கங்கை நீரைப் பருகி, ஒரு முறையாவது முராரியைப் பூஜித்தால் யம பயம் இருக்காது என்கிறார். இவ்வளவு மகிமை வாய்ந்த கங்கை நதிக்கு புஷ்கரம் இம்மாதம் 22–ஆம் தேதி முதல் ஆரம்பமாகிறது. ஒரு முறை கங்கையைத் தரிசித்தாலே பக்தர்கள் மெய்மறந்து விடுகின்றனர். புஷ்கரத்தின்போது கங்கை நதி மேலும் அழகுபடுத்தப் படுகிறது. காசி திருத்தலமே தீபங்களால் மிளிரும். பாடல்களால் நிறைந்து இருக்கும். சங்கொலி முழங்கும். டமருகம் ஒளி கொட்டும். பக்தர்களும் மெய்மறந்து ஆனந்தமடைவர். எங்கு காணினும் பட்டு உத்திரங்கள், சிவப்பு நிற ஆடைகள், கைகளில் ஆரத்தியும், கண்களில் பக்தியுடனும்... காண்பதற்கு அழகாக கங்கா தேவி காட்சியளிப்பாள். குளிர்ந்த காற்று இதயத்தில் பாய்வதைப் போன்று கம்பீரமாகப் பாயும் கங்கை மாதாவை ஆரத்திகளால் காண்பதும் அழகு. முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஜல தேவதைக்கு புஷ்கரத்தின்போது பூஜை செய்வதும், தூபம், தீபத்துடன் வணங்குவதும் சிறப்பாகும். நாமும் கங்கா புஷ்கர யாத்திரை சென்று கங்கையில் நீராடி, கங்கா தேவியை வணங்கி, அம்மாதாவின் இன்னருளைப் பெற்றிடுவோம்.

3

# சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை-3

# வராகவதாரம்

-முனைவர் பிரியா கிருஷ்ணன்,
சென்னை, 7299587879

வராகம் என்பது விஷ்ணுவின் மூன்றாவது அவதாரம் ஆகும். விஷ்ணு புராணம் வராக அவதாரத்தை தியாகத்தின் அடையாளமாகக் கூறுகின்றது.இந்த அவதாரத்தில் விஷ்ணு ஒரு பன்றி உருவம் கொண்டு இரண்டு தந்தங்களுடன் அவதரித்தார். இந்த உலகில் உயிரினங்களைப் படைப்பதற்கு விரும்பிய பிரம்மன், பிரளய நீரால் மூழ்கி இருந்த பூமியை மீட்க ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்தார். எம்பெருமான் பிரம்மனது நாசித் துவாரத்தில் இருந்து கட்டை விரல் அளவுள்ள பன்றிக் குட்டியாக வெளிக்கிளம்பி, மிகப் பெரிய மலை போன்ற வராக உருக்கொண்டு, கடல் நீரைப் பிளந்து சென்று தன் பற்களால் பூமியை எடுக்க முயன்றார்.

அவ்வமயம் அசுரத் தலைவனான இரண்யாட்சன் அவரை எதிர்க்க, கணப்பொழுதில் வராகப் பெருமாள் அவனை அழித்தார். பின் தன் கோரைப் பற்களின் நுனியில் பூமியை மேலே கொணர்ந்து நிலை நிறுத்தினார். அதோடு மட்டும் அல்லாமல் திரும்பவும் பூமி நீரினில் மூழ்காது இருக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தினார். விஷ்ணு புராணத்தின் கூற்றுப்படி, வராகத்தின் ஒவ்வொரு உடல் பாகமும் ஒவ்வொன்றைக் குறிக்கின்றது. வராகத்தின் கால்கள் வேதங்களைக் குறிக்கின்றன.



தந்தங்கள் துன்பத்தைக் குறிக்கின்றன. முடி புல்லைக் குறிக்கின்றன. மூட்டுகள் வெவ்வேறு விழாக்களைக் குறிக்கின்றன. காதுகள் சடங்குகளைக் குறிக்கின்றன. கரடு முரடான முடிகள் பாலியல் மேம்பாடுகளைக் குறிக்கின்றன. கண்கள் பகல் மற்றும் இரவைக் குறிக்கின்றன.

மூக்கு பரிசுப் பொருட்களை குறிக்கின்றன. வராகத்திற்கும் திருப்பதி கோயிலுக்கும் ஒரு சிறப்புத் தொடர்பு உள்ளது. ஒருவர் திருப்பதி கோயிலுக்குச் சென்றால், முதலில் ஆதி வராக சன்னதிக்குச் சென்று வணங்க வேண்டும் என்பது ஐதீகம். பின்னர்தான் வேங்கடவனை வணங்கச் செல்வார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த வராக அவதாரம் குறித்து பரிபாடல் பின்வருமாறு பதிவு செய்திருக்கின்றது.

*நெய்தலும் குவளையும்
ஆம்பலும் சங்கமும்
மை இல் கமலமும்
வெள்ளமும் நுதலிய
செய் குறி ஈட்டம் கழிப்பிய
வழிமுறை
கேழல் திகழ்
வரக் கோல
மொடு பெயரிய*





# ஸ்ரீநிவாசபத்மாவதி பரிணயோத்ஸவம்



திருமலையப்ப ஸ்வாமி யானை, குதிரை, கருட வாகனத்திலும், தேவியர் இருவரும் ஒரே பல்லக்கிலும் நாராயணகிரி உத்யானவனத்தை அடைவர். அங்கு திருமணச் சடங்குகள் வேத கோஷங்கள் முழங்க நடைபெறும். மூன்று நாட்களிலும் நான்கு வேதங்க ளிலிருந்தும் திவ்யமான மந்திரங்களை வேத விற்பன்னர்கள் முழங்குவதுடன், மங்கள வாத்யம், கர்நாடக சங்கீதம், வாத்யக் கச்சேரிகள், ஹரிகதை, நடனம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடை பெறும். ஒவ்வொரு நாளும் தெய்வீக தம்பதியரின் கொலுவும், ஊஞ்சல் சேவையும் கண்டு தெய்வீகத் தம்பதிகளின் திவ்ய அருளைப் பெற்றிடலாம்.



*ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு*
*ஊழி யாவரும் உணரா;*
*ஆழி முதல்வ! நிற் பேணுதும், தொழுது.*

–பரி.2.13–19

என்றும்,

*நித்தில மதாணி அத்தகு மதி மறுச்*
*செய்யோள் சேர்ந்த நின் மாசு இல் அகலம்*
*வளர் திரை மண்ணிய கிளர் பொறி நாப்பண்*
*வை வான் மருப்பின் களிறு மணன் அயர்பு*
*புள்ளி நிலனும் புரைபடல் அரிது என*
*உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று.*

–பரி.2.30–35

என்றும்,

*கீழ் ஏழ் உலகமும் உற்ற அடியினை*
*தீ செங் கனலியும், கூற்றமும்,ஞமனும்,*
*மாசு இல் ஆயிரம் கதிர் ஞாயிறும், தொகூஉம்*
*ஊழி ஆழிக்கண், இரு நிலம் உரு கெழு*
*கேழலாய் மருப்பின் உழுதோய் எனவும்*

–பரி.3.20–24

என்றும்,

*புருவத்துக் கரு வல் கந்தத்தால்*
*தாங்கி, இவ் உலகம் தந்து அடிப்படுத்ததை*
*நடுவண்*
*ஓங்கிய பலர் புகழ் குன்றினோடு ஒக்கும்*

–பரி.4.22–24

என்றும்,

*நானிலந் துளக்கற முழுமுத ணாற்றிய*
*பொலம்புனை இதழணி மணிமடற் பேரணி*
*இலங்கொளி மருப்பிற் களிறு மாகி*

–பரி.13.34–36

எனப் பரிபாடலில் வராக அவதாரம் குறித்துப் பேசப்பட்டுள்ளது. வராக அவதாரத்தை குறிக்கும் வராக புராணம் ஒன்று உண்டு. இது திருமாலின் அவதாரத்தினை விளக்கும் புராணம். இப்புராணம் 24,000 சுலோகங்களைக் கொண்டதும், திருமாலின் பெருமைகளை எடுத்துரைக்கும் சாத்துவிக புராண வகையைச் சார்ந்ததும் ஆகும். பாதாளத்திற்குச் சென்ற பூமா தேவியை மீட்கத் திருமால் வராக அவதாரம் எடுத்தார். அவ்வாறு மீட்கப்பட்ட பின்பு பூமாதேவியின் கேள்விகளுக்கு வராக அவதாரக் கோலத்திலேயே திருமால் அளித்த பதில்களின் தொகுப்பே இந்நூலாகும்.

வராக அவதாரத்தில் காசியப முனிவருக்கும், அவருடைய மனைவியான திதிக்கும் பிறந்த இரணியாட்சனை திருமால் அழித்தார். அதுவே வராக அவதாரம் என்று அழைக்கப்படுகின்றது.

அதேபோல் வராகப் படிமம் என்பதை ஆதி வராக வடிவம் குடவரையாகச் செதுக்கப்பட்டுள் ளது. வராகப் புடைப்புச் சிற்பம் காஞ்சிபுரம் கைலாச நாதர் கோயில், திருப்பரங்குன்றம் ஆகியவற்றில் குடைவரையாக உள்ளது.

பெருமை அறிவோம்...

# சீதாராமர் திருக்கல்யாணம்



தர்மாத்மாவானவன் இராமன். மானிடராகவே வாழ்ந்து, மானிட தர்மத்தை நிலைநாட்டிய மஹா புருஷன். அந்த ஸ்ரீராம பிரானுக்கு நமது பாரத தேசத்தில் எத்தனையோ கோயில்கள் அமைந்து உள்ளன. அந்த வகையில் ஆந்திர மாநிலத்தில், கடப்பா மாவட்டத்தில் "ஒண்டி மிட்டா" என்கிற திவ்ய க்ஷேத்திரத்தில் ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய இராமர் கோயில் அமைந்துள்ளது.

வருடாவருடம் ஸ்ரீராமபிரான் அவதாரமான சித்திரை (சைத்ர) மாதத்தில் இங்கே கோலாகலமாக பிரம்மோத்ஸவம் நடைபெறுவது வழக்கம். முடிவாக ஸ்ரீராமநவமிக்கு அடுத்ததாக சீதா, ராம கல்யாணம் நடந்தேறிய பின்னர் இப் பிரம்மோத்ஸவத்தை நிறைவு செய்வார்கள். திருமலை, திருப்பதி தேவஸ்தானத்தின் மேற்பார்வையில் இருக்கும் இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு தற்போது புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

திருக்கல்யாணத்தன்று ஆந்திர மாநில அரசு சார்பில் எம்பெருமான் ஸ்ரீராமச்சந்திர பிரபுவிற்கும், ஸ்ரீசீதா தேவிக்கும் பட்டு வஸ்திரம் சமர்ப்பிப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது. முதல் அமைச்சரோ அல்லது அவரது சார்பாக அவரது அமைச்சர் அவையில் இருக்கும் அமைச்சர் அந்த வஸ்திரங்களைத் தனது சிரஸில் சுமந்து வந்து எம்பெருமானுக்கு சமர்ப்பிப்பார்கள்.



இதில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் முக்கிய அதிகாரிகளும், கோயில் நிர்வாகிகளும், லக்ஷக்கணக்கான பக்தர்களும் கலந்து கொண்டு திவ்ய தம்பதிகளின் திருவருளைப் பெறுகிறார்கள்.

பக்தர்களின் வசதிக்கேற்ப பேருந்துகளும், தங்குமிடங்களும், அன்னதானங்களும் தி. தி. தேவஸ்தானத்தினரால் செய்து தரப்பட்டு, பக்தர்கள் மகிழ்ச்சியோடு இத்திருக்கல்யாணத்தை தரிசிக்க வழிவகை செய்கிறார்கள்.

இப்போது நாம் பின்னோக்கி திரேதாயுகத்தில் மிதிலாபுரியில் கோலாகலத்துடன் நடைபெற்ற சீதா ராம கல்யாணத்தைப் பற்றிப் பார்க்கலாம். வீதியெங்கும் மாவிலைத் தோரணங்கள் ஆட, அனைவரது இல்லங்களின் முன்பு பெண்மணிகளால் போடப்பட்ட அழகிய மாக்கோலங்களும், தீபவிளக்குகளும் பிரகாசிக்க ஆடவரும், பெண்டிரும் ஆடலும், பாடலுமாக கோலாட்டங்கள் போட்டுக் கொண்டும், கும்மியடித்துக் கொண்டும் கூட்டம், கூட்டமாக திருக்கல்யாண மண்டபத்தை நோக்கி நடந்தனர். இதை கம்பர்,

*"பொன்னின் ஒளி பூவின் வெறி சாந்து பொதி சீதம்*
*மின்னின் நிழல் அன்னவள் தன் மேனியொளிமான*
*அன்னமும், அரம்பையரும் ஆரமிழ்தும் நாண*
*மன் அவையிருந்த மணி மண்டபம் அடைந்தாள்"*









தன்னுடைய இயற்கையான தேக ஒளியோடு, பொன்னிற்கே இயல்பான மின்னொளியுடன் சேர்ந்து, பூவின் நறுமணமும் கலந்து, சந்தனத்திற்கு இயல்பாகப் பொதிந்திருக்கும் குளிர்ச்சியுடன், அரம்பையர் வெட்கித் தலை குனியும்படியாக, பேரழகுடன் விளங்கினாள் சீதாதேவி என்கிறார் கவி. கண்டவர் கண்களை இமைக்க மறந்தனராம். நாங்கள் செய்த தவத்தின் பயனாக இராமன் இங்கு வந்தது. சங்கு, சக்கரம் ஏந்திய திருமால், செந்தாமரைக் கண்ணன் அவன். ஆதலால் அவனை மணம் புரியப்போகும் இவள் செந்தாமரை மலரில் தோன்றிய திருமகளே என்றனராம்.

அதே போன்று சீதா தேவியின் மனோ நிலையைக் கம்பர் கூறுகிறார். வில்லை வளைக்க வேண்டியவன் வில்லை உடைத்து விட்டாரே, தந்தை மறுத்து விடுவாரோ என்கிற பயத்தோடு இருந்தவளுக்கு இப்போது திருக்கல்யாணம் நடைபெறும் வேளை வந்து விட்டதை நினைத்து புல்லரித்துப் போகிறாளாம்.

இராமனை நினைத்த மாத்திரத்தில் சீதையின் கொடி உடல் அமிர்தம் உண்டதைப் போல தடித்து விட்டதாம். அத்தனை சந்தோஷம். அன்று கடல் கடைந்து தேவர்களுக்காகத் திருமால் பெற்றுத் தந்த அமிர்தம், அதை முழுவதுமாக தானே அருந்தினால் ஏற்படும் களிப்பு, தடிப்பு, பூரிப்பு சீதா தேவிக்கு ஏற்பட்டதாம்.

பலபேர் அருந்த வேண்டிய அமிர்தம் அல்லவா அது. அதை ஒருவரே அருந்தினால் உடல் பூரிக்காதா, இது தான் கம்பனின் கவித்திறன். சீதாப் பிராட்டிக்கு அந்த அமிர்தமே ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி அல்லவா. அந்த அமிர்தத்தை ஒத்த ஸ்ரீராமன் திருமணக்கோலத்தில் தேரில் ஏறி மணமண்டபம் அடைந்தானாம். அப்போது மிதிலை வீதிகளில் ஸ்ரீராமனின் பேரழகைக் கண்ட மக்கள் ஆனந்தித்தனராம்.

*''தோள் கண்டார் தோளே கண்டார் தொடு கழல் கமலம் அன்ன*
*தாள் கண்டார் தாளே கண்டார், தடக்கை கண்டாரும் அஃதே*
*வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?*
*ஊழ் கண்ட சமயத்தன்னான் உருவு கண்டாரை ஒத்தார்''*

ஸ்ரீராமன் மணமண்டபம் சேரவும், சீதா தேவியும் மண மாலையோடு வருகை தரவும், அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் என்கிறார் கவி.

அலை கடலில் தோன்றி, அவனி வந்து, இதோ மண்டபம் வந்த சீதா தேவி சிவந்த பொன் மயமான பூங்கொம்பு, வில் போன்ற புருவம், கயல் மீன்கள் போன்ற விழிகள், அந்த மீன்களை பூர்ண சந்திரன் போன்ற திருமுகம் ஏந்தி கொண்டிருக்க, தான் மணக்கப் போவது ஸ்ரீராமபிரானை என்கிற மகிழ்ச்சியில் மலர்ந்த முகத்தோடு கிழக்கு நோக்கிய மண்டபத்தில் நுழைகிறாளாம். கீழ் திசைச் சூரியன் முளைத்து எழுந்ததைப் போன்ற சூரிய குல திலகனான ஸ்ரீராமனைக் கடைக்கண்களில் தரிசிக்கிறாளாம்.

இதோ வசிஷ்டர் நடத்திக் கொடுக்கிறார் சீதா, இராம திருக் கல்யாணம்,

*"தண்டிலம் விரித்தனன், தருப்பை சாத்தினன்*
*மண்தலம் விதி முறை வகுத்து, மென்மலர்*
*கொண்டு நெய் சொரிது எரி குழும்ம் மூட்டினன்*
*பண்டுள மறை நெறி பரவிச் செய்தனன்"*

"அரிசியைப் பரப்பி, தர்ப்பைப் புல்லை இட்டு, வட்டமான இடம் அமைத்து அக்னி வளர்த்து, பூக்களைத் தூவி, ஹோமாக்னி மூட்டி, மறை மந்திரங்களை உச்சரித்தார் வசிஷ்ட மகாமுனி. தம்பதி சமேதரராக சீதா தேவியை ஸ்ரீராமனுக்கு கன்யாதானம் செய்து கொடுத்தார் ஜனக மகாராஜா. "திருமாலும், திருமகளான லக்ஷ்மியும் போல, என் குலக்கொடியான சீதையோடு நிலை பேறு பெற்று வாழ்வாயாக" என்று ஸ்ரீராமனிடம் கூறி, குளிர்ந்த மங்கள தீர்த்தத்தால் தாரை வார்த்து ஸ்ரீராமபிரானின் திருக்கரங்களில் கொடுத்தார். கன்யாதானம் நிறைவேறியது.

அடுத்து, பாணிக்ரஹணம்; சீதைப் பிராட்டியின் தளிக்கையில் பிடித்தான் ரகுகுல ராமன்.

*"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*
*முத்துடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ்*
*மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்*
*கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்"*

என்று ஆண்டாள் பிராட்டி வாரணமாயிரம் பாசுரத்தில் குறிப்பிட்டதைப் போல மங்கள வாத்யங்கள் முழங்க, துந்துபி ஒலிக்க, ரிஷி, முனிவர்களின் ஆசியுடன், தசரத சக்கரவர்த்தியும், ஜனக மகாராஜரும் மங்கள அக்ஷதைகளைச் சொரிய, காலை வந்த உற்றாரும், உறவினரும் வாழ்த்த, எங்கும் மலர்மாரி பொழியும் ஸ்ரீசீதா, ராம கல்யாணம் விமரிசையாக நடந்தேறியது.

*"ஆர்த்தன பேரிகள், ஆர்த்தன சங்கம்*
*ஆர்த்தன நான்மறை ஆர்த்தன வானோர்*
*ஆர்த்தன பல்கலை ஆர்த்தனர் பல்லாண்டு"*

என்று மிதிலாபுரியில் சீதா ராம திருக்கல்யாணம் மிக வைபவமாக நடைபெற்றது. அதே முறைப்படி அதே கோலாகலத் துடன் வைபவமாக இந்த ஒண்டிமிட்டா திவ்ய க்ஷேத்திரத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் ஒவ்வொரு ஆண்டும் சீதா இராமன் திருக்கல்யாணம் நடைபெற்று வருகின்றது. திரளான பக்தர்கள் இத்திருக்கல்யாண உத்ஸவத்தில் கலந்து கொண்டு திவ்ய தம்பதிகளின் திருவருளுக்குப் பாத்திரமாகிறார்கள்.

*"லக்ஷ்மீ கல்யாண வைபோகமே சீதா கல்யாண வைபோகமே"*

**– திருமதி டி.கே.லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,**
**திருப்பதி.**








# திருவாய்மொழியில் இராமானுஜரின் நிர்வாகம்



- திரு.கிடாம்பி
நாராயணன்,
திருவல்லிக்கேணி.
9444918374

மாறன் என்று கொண்டாடப்படும் நம்மாழ்வாரே இராமானுசருக்கு மிகப் பெரிய செல்வம். நம்மாழ்வார்தான் இராமானுசருக்கு தந்தை; தாய்; ஆசிரியர்; இறைவன் ஆவார். அவர் அருளிச் செய்த தமிழ் வேதமே எனக்கு எல்லாம் என்று அமுதனார் பேசுகிறார். இராமானுசர் அனைவரும் வியந்து போற்றும் தத்துவ மேதை. எல்லா உயிர்களிடத்திலும் மிகுந்த அன்பு உடையவர். சமுதாய சிந்தனையும், சம நோக்கும், சமூக நோக்கமும் உடைய புரட்சியாளர். இந்த மண் உலகில் வைகுந்தத்தைக் காட்டிய விஞ்ஞானி. மிகப் பெரிய வேதாந்தியாகவும் திகழ்ந்தவர் இராமானுசர். நம்மாழ்வார் அருளிச் செய்த பாசுரங்களில் ஆழ்ந்து வேதாந்த விழுப்பொருளைக் கண்டவர். அவ்வாறு இராமானுஜர் சுவைத்த சில பாசுரங்களை நாம் இக்கட்டுரையில் கண்டு மகிழ்வோம்.

*''அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து
அறியா மாமாயத்து அடியேனை வைத்தாயால் -அறியாமைக்
குறளாய் நிலம் மாவலி! மூவடி என்று - அறியாமை
வஞ்சித்தாய் என தாவியுள் கலந்தே!''*

–திருவாய் மொழி 2–3–3

நம்மாழ்வார் வருத்தத்தோடு இந்த பாசுரத்தை பாடினார் என்று திருமாலை ஆண்டான் என்ற ஆசார்யர் பொருள் கூறினார். இராமானுஜர் இந்த பாசுரத்திற்கு சுவைபட பொருள் உரைத்தார். அதைப் பார்ப்போம்.

ஒரு பாசுரத்திற்கு அர்த்தம் சொல்லும் பொழுது, இதற்கு முந்தைய பாசுரத்தின் பொருளையும், இதற்கு பிந்தையப் பாசுரத்தின் பொருளையும் உணர்ந்து அர்த்தம் சொல்ல வேண்டும் என்கிறார் இராமானுஜர். இதற்கு முந்தைய பாசுரத்தில் *''அறியாதன அறிவித்த அத்தா''* என்றும், இதற்கு பிந்தைய பாசுரத்தில் *''எனதாவியுள் கலந்த பெருநல்உதவி''* என்றும் எம்பெருமான் தனக்குச் செய்த உபகாரத்தை நினைத்து, மகிழ்ச்சி கொண்டாடிப் பாடினார் ஆழ்வார்.

இந்த பாசுரத்திற்கு இராமானுஜர் கூறிய பொருள் இதோ:

இந்த ஸம்ஸார மண்டலம் ஞானத்தை அழிக்கும் தன்மை உடையது. என்னுடைய ஞானத்தையும் அழித்து, துன்பப்படச் செய்தது. இப்படிப்பட்ட எனக்கு, அறிவே நடைபெறாத இளமை பருவத்திலேயே, எனக்கு அருள் புரிந்தாய். உனக்கு அடிமை செய்து, தொண்டு செய்வதில் ஆசையை உண்டாக்கினாய். உன்னிடத்தில் அன்பு உடைய

வனாக என்னை செய்தாயே என் பெருமானே! என்பதே இராமாநுஜர் காட்டிய பொருள். அடுத்த பாசுரம் :

*"அந்தாமத்தன்பு செய்து என்னாவி சேர் அம்மானுக்கு
அந்தாம வான்முடி சங்கு ஆழிநூல் ஆரமுள!
செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம்
செந்தாமரையடிக்கள் செம்பொன் திருவுடம்பே!"*

–திருவாய் மொழி 2–5–1

அடியார்களோடு கலக்க வேண்டும் என்று நம்மாழ்வார் ஆசைப்பட்டார். எனவே எம்பெருமான் தன்னடியார்களாய் விளங்கும் சங்கு, சக்கரம் போன்ற நித்ய ஸூரிகளோடு வந்து, கலந்தான் என்று இந்த பாசுரத்தின் அர்த்தத்தை திருமாலை ஆண்டான் என்ற ஆசார்யர் கூறினார்.

இராமாநுஜர் எதையும் நன்றாக ரசித்துப் பொருள் கூறுபவர். அவர் கூறிய விளக்கம் இதோ. இப்பாசுரத்தில்,

*"அந்தாமம் வான்முடி சங்கு ஆழி நூல் ஆரமுள"*

என்று ஆழ்வார் பாடியுள்ளார். அழகிய மாலை, ஒளியுள்ள திருமுடி, ஆழி நூல் ஆரம் என்று இதற்கு அர்த்தம். எம்பெருமான் ஆழ்வாரோடு கலப்பதற்கு முன்பு, எம்பெருமானுடைய ஆபரணங்களும், ஆயுதங்களும் ஒளி இழந்து கிடந்தது. மிகவும் வாடி இருந்தது. ஆழ்வாரோடு கலந்த பின்பு, ஆபரணங்கள் மகிழ்ச்சி அடைந்தன. ஆயுதங்களும் மகிழ்ச்சி அடைந்தன. மகிழ்ச்சி அடைந்த தால், புதுப் பொலிவு பெற்றது. ஒளி பெற்றது. அதன்பின் தான், தாங்கள் உயிரோடு இருப்பதாகவே நினைத்தன. அடுத்த பாசுரம் :

*"எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில் மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேதவிமலர் விழுங்கும் - என்
அக்காரக்கனியே! உன்னை யானே."*

–திருவாய் மொழி 2–9–8.

மிகுந்த தாகம் உள்ளவன். ஒரு துளி தண்ணீர் கிடைத்தாலும் போதும் என்று கூறுவதுபோல், சிறிய காலமானாலும் எம்பெருமான் என் நெஞ்சினுள் இருந்தால் போதும் என்று ஆழ்வார் ஆசைப் படுவதாக, ஆளவந்தார் என்ற ஆசார்யர் பொருள் கூறுவார் என்று திருமாலையாண்டான் சொன்னார்.

இதைக்கேட்ட இராமாநுஜர் கூறினார் இது நல்ல விளக்கம், அழகான விளக்கம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நம்மாழ்வாருடைய மனநிலைக்கு இது பொருந்தவில்லை.

எம்பெருமான் சிறிது காலமாவது தன்னுடன் இருந்தால் போதும் என்று ஆழ்வார் ஒரு நாளும் நினைக்க மாட்டார். எம்பெருமான், எப்பொழுதும் தன்னுடன் இருக்க வேண்டும் என்று தான் ஆழ்வார் ஆசைப்படுவார். எல்லா காலத்திலும் நீ என்னோடு கலந்து இருக்க வேண்டும். இதையே நான் உன்னிடத்தில் வேண்டுகிறேன். இதை நீ செய்து விட்டால் போதும். வேறு எதையும் உன்னிடத்தில் நான் விரும்ப மாட்டேன் என்று ஆழ்வார் கூறுவதாக இராமாநுஜர் அர்த்தம் சொன்னார். அடுத்த பாசுரம்,



*“வேறு கொண்டு உம்மை யானிரந்தேன்*
*வெறி வண்டினங்காள்*
*தேறு நீர்ப்பம்பை வடபாலைத்*
*திருவண் வண்டூர்*
*மாறில் போரரக்கன் மதிள் நீறெழச்*
*செற்று கந்த*
*ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள்*
*என்மின்களோ”.*

திருவாய் மொழி 6–1–10

நம்மாழ்வார் ஒரு பெண்ணின் மன நிலையை அடைந்தார். அவர், பராங்குச நாயகி என்று பெயர் கொண்டவர். பராங்குச நாயகி என்ற தலைவி எம்பெருமான் என்ற தலைவனைப் பிரிந்து வருத்தப்பட்டுப் பாடுகிறாள். எம்பெருமான் என்னைத் தேடி வரவில்லையோ என்று வருத்தம் அடைந் தாள் பராங்குச நாயகி. ஆனால், அவனைப் பிரிந்து, நான் இன்றும் உயிரோடு இருக்கி றேன் என்று அவனிடம் கூறுங்கள் என்று அழகான வண்டுகளை தூது விடுகிறாள் பராங்குச நாயகி. இது ஆளவந்தார் என்ற ஆசார்யர் கூறியதாக திருமாலை ஆண்டான் இராமாநுஜரிடம் கூறினார். அகத்துறையான குறுந்தொகையில் ஒரு பாடல்.

*“உள்ளார் கொல்லோ தோழி*
*யுள்ளியும்.....வாரார் கொல்லோ!”*

தலைவனும், தலைவியும் பிரிந்தார்கள். தலைவி வருத்தப்பட்டு, தன் தோழியிடம் கூறுகிறாள். “நம்மை நினையாமல் இருக்கி றாரோ? அல்லது நினைத்தும் வாராமல் இருக்கிறாரோ? நம்மைப் பிரிந்த தலைவர் எப்பொழுது வருவார்?” என்று கேட்கிறாள். இராமாநுஜர், தமிழ் இலக்கியத்தேன் என்ற இனிமையைச் சுவைத்தவர். ஆகவே, மேலே காட்டப்பட்ட திருவாய் மொழிப் பாசுரத்திற்கு மிகவும் காதல் உணர்வு மிக்க அருமையான பொருளைச் சுட்டிக் காட்டுகின்றார்.

தலைவனும், தலைவியும் ஒருவரை மற்றொருவர் பிரிவதை தாங்க முடியாத, மென்மனம் கொண்டவர்கள். அன்றில் பறவை போன்றவர்கள். அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வெவ்வேறு இடத்தில் வாழ்ந்தாலும், ஒருவர் உயிருடன் இருந்தால், மற்றொருவரும் உயிருடனே இருப்பார். ஒருவர் இறந்து விட்டால், மற்றொருவரும் உயிர் நீத்து விடுவார். இந்த பிரிவில்லாத தன்மையை, “இன்றியமையாமை” என்று தமிழ்ப் புலவர்கள் கூறுவார்கள்.

இங்கே தலைவன் எம்பெருமான்; தலைவி பராங்குச நாயகி. தலைவி தூது விடுகிறாள். “அவன் உயிருடன் இருப்பதால், நானும் உயிரோடுதான் இருக்கிறேன் என்று கூறுங்கள். அவனுக்கும், இது நன்றாகத் தெரியும். சுக்ரிவன், விபீஷணன் போன்றவர்களுக்கு முடிசூட்டி விட்டோம். இனி செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று தலைவன் நினைத்துவிட்டானோ? அவன் செய்ய வேண்டியது ஒன்று உண்டு. அவனால் காப்பாற்றப்பட வேண்டியவள் நான், இன்றும் உயிரோடு இருக்கின்றேன். இதை அவனிடத்தில் சொல்லி, என்னைக் காப்பாற்றுங்கள்” இவ்வாறு இராமாநுஜர் தலைவியான பராங்குச நாயகியின் உணர்வை அறிந்து, அர்த்தம் கூறினார்.

இது போன்று, இராமாநுஜர் சுவைத்த கருப்பஞ்சாறு பல உண்டு. இராமாநுஜர் எதையும் நன்றாக உணர்ந்து, பொருள் கூறும் வல்லமை படைத்தவர். திருவரங்கத்து அமுதனார் என்ற வைணவ ஆசிரியர், “சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவன்” என்று இராமாநுஜரைக் கொண்டாடு கிறார். இராமாநுஜர் காட்டிய பாதையிலேயே நாமும் சென்று, ஆழ்வார்களைச் சுவைத்து இன்புறுவோம்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**



- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு நாம் அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் :
0877-2263601

**இரத்தம் தானம் செய்யுங்கள்!**
**ஆபத்தில் உள்ளோரைக் காத்திடுங்கள்!!**



ஜோதிட சாஸ்திரம்

# செவ்வாய்

- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை, 97862 80577.

ஜோதிட சாஸ்திரத்தில் சக்திமிக்க 5 கிரகங்களில் செவ்வாய்க்குத் தனி இடமுண்டு. செவ்வாயை "அங்காரகன்" என்றும், "வீரத்திற்கு அதிபதி" என்றும் அழைப்பார்கள். ஒருவரின் கோபம், முரட்டுக்குணம் ஆகியவற்றுக்குச் செவ்வாய் பொறுப்பாகிறார்.

செவ்வாய் சிவப்பு நிறம், மருத்துவம், விளையாட்டு, அதிகாரம் ஆகியவற்றுக்கு அதிபதி. இந்தச் செவ்வாய் சுபத்துவம் பெற்றிருக்கும் போது தான் ஒரு ஜாதகர் மருத்துவராகிறார். வளர்பிறைச் சந்திரன், சுக்கிரன், குரு ஆகிய கிரகங்களுடன் பத்தாமிடத்திலிருந்தால் ஜாதகர் மருத்துவராவார்.

செவ்வாய் சகோதரகாரகனாகிறார். ஒருவரின் ஜாதகத்தில் சகோதரர்களின் நிலையைச் செவ்வாய் இருக்கும் நிலையைக் கொண்டு அறியலாம்.

செவ்வாய் இரு ஆதிபத்தியமுள்ள கிரகம், மேஷம், விருச்சிகம் ஆகிய இரு ராசிகளுக்கும் இவர்தான் அதிபதி. மகர ராசியில் உச்சமடையும் அவர், கடக ராசியில் நீசமடைகிறார். மகர ராசியில் பூமிக்கு அருகில் வரும்போது ஜோதிப்பிழம்பாக இருப்பார். பூமியிலிருந்து தூரத்தில் இருக்கும்போது கடக ராசியிலிருப்பார்.

மேஷம், விருச்சிகம், தனுசு, மீனம், சிம்மம், கடகம் ஆகிய ஆறு லக்னக்காரர்களுக்கும் மிகவும் அனுகூலமானப் பலன்களைத் தருவார். இந்த ஆறு லக்னக்காரர்களுக்கும் செவ்வாய் சரியான நிலையில் இல்லாவிட்டால், அவர்கள் சென்று வணங்க வேண்டிய மிக முக்கியத்தலம் வைத்தீஸ்வரன் கோயில்.

ஜோதிட சாஸ்திரத்தில், "பூமிக்காரகன்" என்று அழைக்கப்படும் செவ்வாய், இளமைத் துடிப்புள்ள கிரகம். செவ்வாய் சிவந்த நிறம் கொண்டவர் என்பதால், சிவப்பு நிறத்திற்கு இவரே அதிபதி ஆகிறார். பூமிக்காரகன் என்பதால் மண்ணில் செய்யக் கூடிய விஷயங்கள், மண்ணால் செய்யக் கூடிய மண்பாண்டங்கள், நெருப்பு சம்பந்தமான வேலைகள், ரத்தம் சம்பந்தப்பட்ட மருத்துவ விஷயங்கள், ஆயுதம் சம்பந்தப்பட்டவை, ராணுவம், ராணுவத் தலைமை, பவளம், துவரம் பருப்பு, வீரியம், ஆகியவற்றுக்கு அதிபதி ஆகிறார்.

குழந்தை முதல் வயோதிகப் பருவம் வரையில் ஆன மனித வாழ்க்கையில் 35 வயதிற்குட்பட்ட இளையப் பருவத்தை செவ்வாய் குறிக்கிறார். இந்தக் காலகட்டத்தில்தான் முன் யோசனை இல்லாமல் தடாலடியாக நம்மை ஏதேனும் காரியங்களில் இறங்க வைப்பவர் செவ்வாய்.

ஜாதகத்தில் செவ்வாய் வலுப்பெற்று இருப்பதைப் பொறுத்தே சொந்த வீடு, மாட்டுப்பண்ணை, பண்ணை வீடுகள் அமைத்துத் தர காரணமாக அமைவார். கூடவே மற்ற சுபக்கிரகங்களின் பார்வை இருந்தால்தான் அவற்றை முழுமையாக அனுபவிக்க முடியும். தொழில் ஸ்தானமான பத்தாமிடத்தோடு செவ்வாய் சம்பந்தப்பட்டால் ஒருவரை விளையாட்டு,



உடற்பயிற்சி சம்பந்தப்பட்ட துறைகளில் பொருளீட்ட வைப்பார். பூமி சம்பந்தப்பட்ட வீட்டுமனை விற்பனை தொழிலிலும் ஜாதகர் கொடிகட்டிப் பறப்பார். அபாரமான லாபம் தருவதும், வீடு கட்டி விற்கும் பில்டர்களுக்குக் கோடிக் கணக்கில் பணத்தை அள்ளித் தருபவரும் இவர்தான்.

செவ்வாயின் இன்னொரு வீடான விருச்சிகம் காலபுருஷ தத்துவத்தில் 8ம் இடமாக வருவதால், காப்பீடு, சந்தைபடுத்துதல் போன்ற துறைகளில் லாபம் ஈட்டச் செய்வார். மேஷ லக்னத்துக்கு செவ்வாய் 10ம் வீட்டில் தனித்து உச்சம் பெற்று லக்னத்தைப் பார்ப்பதை விட அவர் 4ம் வீட்டில் நீசம் பெற்று சுபத்துவ, சூட்சும வலுப் பெறுவது சிறந்த யோகங்களைத் தரும். 10ம் வீட்டில் உச்சம் பெறும் செவ்வாய் திக்பலமும் பெறுவார் என்பதால், இந்த நிலையில் மத்திமமான பலன்களே அமையும்.

ரிஷப லக்னத்துக்கு அவர் 7ம் வீட்டில் அமர்வதை விட 12ம் வீட்டில் அமர்வது யோகங்களைத் தரும். கடக லக்னத்துக்கு செவ்வாய் ஐந்து, பத்துக்குடைய யோகாதி பதியாக அமைவார். இந்த நிலையில் அவர் ஐந்தாமிடமான திரிகோண ஸ்தானத்தில் இருந்தால் யோகங்களைச் செய்ய மாட்டார். ஒரு பாபக் கிரகம் கேந்திரங்களில் இருந்தால்தான் வலுப்பெற்று நன்மை செய்யும் என்ற விதிப்படி, அவர் ஐந்தாமிடத்துக்கு ஆறாமிடமான 10ம் வீட்டில் ஆட்சி பெற்றால் மட்டுமே நன்மைகளைச் செய்வார்.

சிம்ம லக்னத்துக்கு அவர் திரிகோண ஸ்தானத்துக்கு அதிபதியாகி 9ம் வீட்டில் அமர்வது நல்ல நிலை அல்ல. அதற்குப் பதிலாக ஒன்பதாம் வீட்டுக்கு எட்டாம் வீடான நான்கில் ஆட்சி பெறுவதே யோக நிலை. மிதுன லக்னத்துக்குச் செவ்வாய் ஆறுக்கு அதிபதியாகி பாப நிலை பெறுவதால் யோகம் செய்ய மாட்டார். கன்னிக்கும் அதேதான். செவ்வாய் தசை வராத மிதுன, கன்னி லக்னக் காரர்கள் அதிர்ஷ்டசாலிகள். துலாம் லக்னத்துக்கு அவர் இரண்டு, ஏழுக்குடையவரானாலும் இரண்டிலோ, ஏழிலோ ஆட்சி பெறுவதை விடுத்து, பத்தாமிடமான கடகத்தில் நீசம் பெற்று திக்பலமும் சூட்சும வலுவும் அடைந்தால் நல்ல மனைவியையும் மண வாழ்க்கையையும், அளவற்ற செல்வத்தையும் தருவார்.

விருச்சிக லக்னத்துக்கு செவ்வாய் நீசம் பெறுவது சிறப்பான நிலைதான். விருச்சிகத்துக்கு லக்னாதிபதியாகும் செவ்வாய் மூன்றில் உச்சம் பெற்றால் மிகச் சாதாரணமான வாழ்க்கையையே அளிப்பார். தனுசு லக்னத்துக்குச் செவ்வாய் 4,8,12ம் வீட்டில் இருப்பது சிறப்பு. அவர் 2,5ம் வீட்டில் ஆட்சி உச்சம் பெற்றிருந்தால் சூட்சும வலு அடைந்திருந்தால்தான் நன்மை செய்வார்.

மகரத்துக்கு 4ம் வீட்டில் ஆட்சி பெறும் நிலையில் ஜாதகர் காவல்துறை, ராணுவத் துறைகளில் வேலை செய்ய வைப்பார். லக்னாதிபதியின் வலுவைப் பொறுத்து, இந்த இடத்தில் இருக்கும் மேஷம் செவ்வாய் ஜாதகரை ஐ.பி.எஸ். அதிகாரி ஆக்கும்.

கும்ப லக்னத்துக்கு 10ம் வீட்டில் தனித்து ஆட்சி பெறுவது நல்ல நிலை அல்ல. ஆனால் 12ம் வீட்டில் உச்சம் பெறுவது, அது மறைவு ஸ்தானம் என்பதால் நன்மையைத் தரும். மீன லக்னத்துக்கு 9ம் வீட்டில் அவர் ஆட்சி பெறுவதை விட, பத்தாமிடமான தனுசில் நட்பு பலம் பெற்றுத் திக்பலம் அடைவது நல்ல யோகம். 2ம் வீட்டில் ஆட்சி பெறுவது சுமாரான பலன்களையேத் தரும்.

மேஷத்தில் செவ்வாய் இருக்கும்போது வெறித்தனமாகவும், விருச்சிகத்தில் உள்ள போது வேகம் குறைவாகவும் இருப்பர். திருடு, வெட்டுக்காயம், தீக்காயம், எதிரிகள், பேராசை, அதிக காமம், போலீஸ், துணிச்சல், அரசியல் தொடர்பு ஆகிய குணங்கள்



ஸப்தகிரி வாசகர்களுக்கும்,
முகவர்களுக்கும்,
எழுத்தாளர் பெருமக்களுக்கும்
எங்களுடைய உளங்கனிந்த
இனிய
தமிழ் வருடப்பிறப்பு
நல்வாழ்த்துகள்!

-பிரதான ஆசிரியர்





அமையும். செவ்வாய்க்கு 4,7,8 ஆகிய பார்வைகள் உள்ளன. 1,4,7 இருப்பது நல்லதல்ல. 2,4,7,8,12 ஆம் இடங்கள் இருப்பது நல்லதல்ல. இந்த இடங்களில் இருந்தால் தோஷம் ஆகும். முதல் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்ற அரசியல் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள், நாட்டு தளபதிகள், நீதிபதிகள், பொறியியல் வல்லுனர்கள் முதலானோர்களின் ஜாதகங்களில் செவ்வாயின் பலம் இருந்தே தீரும் என்பது உறுதி. அதே நேரத்தில் கண்டிப்பு, தொண்டு செய்தல், தலைமை வகித்தல், வைராக்கியம், பகைவரை வெல்லும் பராக்கிரம் இவற்றை வழங்குபவர் செவ்வாய் கிரகம். மேஷம், விருச்சிகம் ஆட்சி வீடுகள், மகரம் உச்ச வீடு, கடகம் நீச வீடு, அவிட்டம், மிருக சீரிடம், சித்திரை நட்சத்திரங்கள் செவ்வாய் கிரகத்திற்கு உரிய நட்சத்திரங்கள். ஜாதகத்தில் செவ்வாய் தோஷமுடையவர்களுக்கு விரைவில் திருமணம் ஆவதில்லை. லக்னத்திற்கு 2,4,7, 8, 12 இவைகளில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் உண்டு. ஆனால் செவ்வாய் குருவோடு சேர்ந்தாலும், சனி, ராகு, கேதுவோடு சேர்ந்தாலும் செவ்வாய் தோஷம் பரிகாரம் ஆகி விடும். செவ்வாய் குருவோடு சேர்ந்தால் சந்திர மங்கள யோகம் உண்டாகும்.

தொடரும்....



**ஒண்டிமிட்டா**
**ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்**
**31-03-2023 முதல் 08-04-2023 வரை**

**31-03-2023,**
**வெள்ளிக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சேஷ வாகனம்

**01-04-2023,**
**சனிக்கிழமை**
பகல் : வேணுகானாலங்காரம்
இரவு : ஹம்ச வாகனம்

**02-04-2023,**
**ஞாயிற்றுக்கிழமை**
பகல் : வடபத்ரசாயி அலங்காரம்
இரவு : சிம்ம வாகனம்

**03-04-2023,**
**திங்கட்கிழமை**
பகல் : நவநீத கிருஷ்ணாலங்காரம்
இரவு : ஹனுமத்சேவை

**04-04-2023**
**செவ்வாய்க்கிழமை**
பகல் : மோஹினி சேவை
இரவு : கருட சேவை

**05-04-2023**
**புதன் கிழமை**
பகல் : சிவதனுர்பாணாலங்காரம்
இரவு : வரவேற்பு, கல்யாணோத்ஸவம், யானை வாகனம்

**06-04-2023**
**வியாழக்கிழமை**
பகல் : திருத்தேர்

**07-04-2023**
**வெள்ளிக்கிழமை**
பகல் : காளியமர்தனாலங்காரம்
இரவு : குதிரை வாகனம்

**08-04-2023**
**சனிக்கிழமை**
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்





# கங்கா புஷ்கரம்

– திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி, கேரளா,
9946128102

***"கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடுகிற்கும்"*** என்பது பெரியாழ்வாரின் பாசுரம். கங்கை நதியை நாம் "கங்கா மாதா" என்று கூறுவதுண்டு. ஏனெனில் அவள் அனைத்து நதிகளுக்கும் தாயாவாள். ஒரு தாய் தன் மக்களை நல்ல போஷாக்காக வளர்ப்பதில் ஆர்வம் கொள்வாள். அதேபோல் கங்கை நதி தான் பாயும் அனைத்து இடங்களிலும் நல்ல சத்துள்ள கனிமங்களை இமாலய மலைகளிலிருந்து கொண்டு வந்து கரைகளில் சேர்க்கிறாள். இதனால் பயிர்கள் மற்றும் பல உயிரினங்கள் வாழ்கின்றன. அவள் கரையில் உள்ள ஊர்கள் சீரும் சிறப்புமாக வளமாக காணப்படுகின்றன. சில கவிகள் கங்கை ஆகாயத்திலிருந்து பூமியைத் தொடும் இடம் வரை கங்கை கன்னிப்பெண்ணாக அதாவது ஹரித்வார் வரை, பின்னர் திருமணமான பெண்ணாக காசி அருகிலும், பின்னர் ஒரு தாயாக மேற்கு வங்காளத்தில் வந்து வங்கக் கடலில் கலக்கிறாள். ஒரு பெண்ணின் அழகான பருவத் துள்ளலாக வந்து, வெட்கமடைந்து வளைந்து கல்யாணம் செய்து கொண்டு ஒரு வீரம் பண்பு நிறைந்த தாயாக வருவதை அவளுடைய வேகத்திலிருந்து அறிய முடியும் என்று கூறுவர்.

ஒரு பெண்ணிற்கு மன்னிக்கும் தன்மை, தூய்மை, வீரம், அழகு போன்ற குணங்கள் இயற்கையாக உள்ளதைப்போல கங்கைக்கும் உள்ளது. கங்கை நம் பாவங் களை மன்னித்து நம்மை தூய்மை அடையச் செய்கிறாள். அவள் வரும் அழகை கண்டு நாம் ஆனந்தம் அடைகிறோம். அவள் வரும் வேகத்தை பார்த்து நமக்கு வீரம் புலப்படுகிறது.

தேவப்பிரயாகை அல்லது திருக்கண்டமென்னும் கடிநகர் என்பது 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபுண்டரீக வல்லித் தாயார் சமேத ஸ்ரீநீலமேகப் பெருமாள் கங்கையுடன் சேர்ந்து நம்மை அருள்பாலிக்கிறார்.

## புஷ்கரனின் கதை

அனைத்து நதிகளுக்கும் அதிபதியான வருணனின் மகன் புஷ்கரன் என்று வேதம் கூறுகின்றது. அவர் பிரம்மாவிடம் பிரார்த்தனை செய்து, அனைத்து தீர்த்தங்களுக்கும் தூய்மையை அளிக்கும் நோக்கத்துடன் தனது கமண்டலத்தின் புனித நீரில் (விஷ்ணுவின் பாதத்திலிருந்து வெளிப்பட்ட) வசிக்க வரம் கேட்டார்.பிரம்மா அதையே ஆசிர்வதித்தார்.

மற்றொரு குறிப்பேடு, புஷ்கரனும் தவம் செய்து, சிவபெருமானிடம் ஜலதத்வ சித்தியை வரமாகப் பெற்றார். இந்த வரங்களால், புஷ்கரர் தீர்த்த பாலகர் ஆனார். அனைத்து தீர்த்தங்களின் பாதுகாவலர். புஷ்கரம் என்பது ஸநாதன தர்மத்தில் ஒரு முக்கிய மான விழாவாகும்.

## எப்போது புஷ்கரம் நிகழும்

வியாழன் (குரு பகவான்) ஒரு குறிப்பிட்ட புனித நதியுடன் தொடர்புடைய ராசிக்கு மாறும்போது, அங்கு வந்து புஷ்கரனும் தங்குவார். புஷ்கரன் தங்கும்

அந்த காலமே அந்நதியின் புஷ்கரமாகக் கருதப்படு கிறது. புஷ்கரன் தங்கும் அந்நதியில் 66 கோடி தீர்த்தங்களும் கலப்பதாக ஐதீகம்.

### புஷ்கரம் கொண்டாடப்படும் நதிகள்

கங்கை, யமுனை, நர்மதை, சரஸ்வதி, கோதா வரி, கிருஷ்ணா, காவேரி, பீமா, தபதி/பிரம்மபுத்ரா, துங்கபத்ரா, சிந்து, பிரான்ஹிதா ஆகிய நதிகளில் புஷ்கரம் கொண்டாடப்படுகிறது. இவைகள் மட்டுமல்லாமல் தாமிரபரணி நதியிலும் விசேஷ புஷ்கரம் கொண்டாடப்படுகிறது.

### கங்கா புஷ்கரம்

கங்கை ஒரு மிகப் பெரிய வற்றாத ஜீவ நதி. இமய மலையிலிருந்து துள்ளிக்குதித்து ஓடி வரு கிறாள். அவளுக்கு ஜாஹ்னவி, பகிரதி, அலகனந்தா, விஷ்ணுபதி என்று பல பெயர்கள் உண்டு. அவள் பிரம்மாவின் கமண்டலத்திலிருந்து விஷ்ணுவின் பாதத்தை கழுவி, சிவபெருமானின் ஜடாமுடியில் இறங்கி ஆகாய கங்கையாக, பூமியை வந்து அடை கிறாள். முப்பெரும் கடவுளின் சம்மந்தம் உடைய பெருமைக்குரியவள். அவள் தாவி வரும் ஊராகிய கங்கோத்ரி, பத்ரிநாத், கேதார்நாத், சங்கம் ப்ரயாக், ஹரித்வார், ப்ரயக்ராஜ், கங்கை சாகர், வாரணாசி போன்ற இடங்களில் சிறப்பாகக் கொண்டாடு வார்கள்.

### கங்கையில் நீராடல்

கங்கை நதியில் நீராடுவது முதன்மைப் பயனா கும். இவ்வாறு புனித நீராடினால் நம் அனைத்து பாபங்களும் விலகும். எல்லாவித நலமும் வாழ்வில் உண்டாகும். மனதாலும், செயலாலும், உள்ளத்தா லும், உடலாலும் நாம் வலிமையாகி தூய்மையடை கிறோம். காமம், க்ரோதம், துக்கம், பயம், சோம்பல் போன்றவைகளிலிருந்து விடுபடுகிறோம். நீரில் இறங்கும் பொழுது முதலில் கைகளால் நீரை எடுத்து கங்கையை நமஸ்கரிக்கவும், பின்னர் நதியில் மூன்று முறை மூழ்கி குளிக்கவும். இந்த சுலோகத்தைக் கூறவும்.

*கங்கை ச யமுனை சைவ கோதாவரி சரஸ்வதி*
*நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மின் சன்னிதம் குரு.*

### கங்கையில் பித்ரு காரியங்கள்

புஷ்கர நேரத்தில் பிண்ட தானம், பித்ரு தர்ப் பணம் மற்றும் பிற பித்ரு கர்மாக்கள் செய்வது முக்கி யம். அங்குள்ள பூஜாரிகளை வைத்து பித்ரு காரியம் செய்வது சாலச் சிறந்தது.

### புஷ்கர ராஜ்

அனைத்து புஷ்கரங்களிலும் கங்கை புஷ்கரம் மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது. எனவே புஷ்கரராஜ் என்று அழைக்கப்படுகிறது.

### கங்கைக்குப் பூஜை

கங்கைக் கரையில் பல பூஜைகள் நடைபெறும். அதில் நாம் பங்கு கொள்வது சிறப்பு. ஹரித்வார், வாரணாசி, ப்ரயாக்ராஜில் நடத்தப்படும் கங்கை ஹாரதி மிகவும் சிறப்பானது. கங்கைக்கு பூஜைகள் செய்து, தீபம் ஏற்றி, மலர்கள் தூவி, பஜனைகள் பாடி அர்ச்சிப்பது விசேஷமானது. காண்பதற்கே மனதில் ஒரு பக்திப் பரவசம் உண்டாகும். நாமும் இந்த பூஜை களை அங்குள்ள பூஜாரியின் உதவியுடன் செய்யலாம். கங்கைக் கரைகளில் உள்ள எல்லா ஆலயங்களையும் சென்று வழிபடுங்கள்.

### கங்கைக் கரையில் தானம்

தங்கம், வெள்ளி, நிலம், பசு, தான்யம், வஸ் திரம், அன்னம், நீர், போர்வை, எள், பால், தேன், நெய், எண்ணெய், கற்பூரம், சந்தனம், சாளக்ராமம், புத்தகம் போன்ற தானங்கள் செய்வது



## புஷ்கரத்தில் தவிர்க்க வேண்டிய விஷயங்கள்

- நதியில் ஆடை இல்லாமல் குளிக்கக்கூடாது.
- நதியில் துப்பவோ, கொப்பளிக்கவோ கூடாது.
- நதியில் சிறுநீர் கழிக்கக் கூடாது.
- நதியில் சோப்பு, ஷாம்பு போன்ற இரசாயண பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது.
- பிளாஸ்டிக் பொருட்களை நதிகளில் போடாதீர்கள்.
- சில்லறைக் காசுகளையும் நதிகளில் போடாதீர்கள்.
- வேண்டாத அசுத்தப் பொருட்களை போடாதீர்கள்.

மேலும் நம் வாழ்வை புனிதமடையச் செய்யும். இவ்வாறு செய்வதால், நம் பித்ருக்கள், தேவர்கள், ஆனந்தம் அடைந்து அருள் புரிவர். நாம் பல ஜென்மங்கள் செய்த பாவங்கள் விலகும். கங்கையில் வாழும் மீன்களுக்கு ஆஹாரம் போடுங்கள். கங்கைக் கரையில் வாழும் பிராணிகள் பசு, குரங்குகள், நாய்கள், பறவைகளுக்கு உணவு அளியுங்கள்.

### புஷ்கர பலன்கள்

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பூமியின் காந்தப் புலத்தை மேம்படுத்தும் சூரிய புள்ளி சுழற்சி (இந்த புஷ்கரம் நேரத்துடன் தொடர்புடையது) நதி நீரை காந்தமாக்கு கிறது. மற்றும் நீரின் மூலம் குணப்படுத்தும் சக்தியை அதிகரிக்கின்றது. அத்தகைய குணப் படுத்தும் சக்தி தியானத்தின் மூலம் பெறும் சக்திக்கு சமமாக இருக்கும். எனவே ஸ்நானம் (குளியல்), ஜபம் (மந்திரம்), அர்ச்சனை (பூஜை செய்தல்), தானம் மற்றும் தியானம் இவை அனைத்தும் மனம், உடல் மற்றும் ஆன்மாவின் ஆற்றலையும் தூய்மையையும் அதிகரிக்கச் செய்கின்றன. புஷ்கரம் சமயத்தின் போது பெறப்பட்ட மற்றும் தண்ணீரில் சேமிக்கப்படும் காந்த சக்தி அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்பும், மதியம் 12 மணிக்கும் அதிகமாக இருக்கும்.

### அதிகம் கடைபிடிக்க வேண்டியவை

கூட்டம் அதிகமானபடியால் எங்கேயும் வரிசை முறையைப் பின்பற்றுங்கள். சத்திரம், கோயில்கள், வீதிகள், விடுதிகள் போன்ற பொது இடங்களில் தூய்மையைக் கடை பிடியுங்கள்.

நமக்கு வளம் பெருக வேண்டும் என்பதற் காகவே கங்கை ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்துள்ளாள். அந்த மாதாவை நாம் வணங்கி மேலும் பெருமிதப்படுத்துவோமாக.

*"புனல் கங்கை என்னும் பேர்ப்பொன்"* என்று ஆழ்வாரின் கூற்றை நாம் தலைவணங்கு வோமாக.




### கங்கை ஆரத்தி

கங்கை நதிக்கு நன்றி செலுத்தும் விதமாக நாள்தோறும் மாலை வேளையில் செய்யப்படும் பூஜையே கங்கை ஆரத்தியாகும். ஒரே நேரத்தில் ஒரே விதமாக வெண்ணிற ஆடை அணிந்து கொண்டு பூஜாரிகளால் இந்த பூஜை செய்யப்படுகிறது. பூஜையின் போது தூபம், தீபம் அலங்காரத்துடன் புஷ்பம் போன்ற உபசாரங்களுடன் கங்கைக்கு சிறப்பாக பூஜை செய்யப்படுகிறது. பக்தர்களும் கண்டு தரிசனம் செய்வதற்கு ஏதுவாக உயரமான மேடைகளில் நின்று பூஜைகள் செய்யப்படுகிறது. அவ்வமையம் ஏராளமான பக்தர்கள் கங்கா மாதாவை தரிசிக்கின்றனர்.



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 81




**இடமிருந்து வலம்**

1. வைணவ நெறியாக ஸ்ரீராமாநுஜர் நிலைநிறுத்திய மார்க்கம்.....(8)
4. துறவிகளின் மன்னர் (அத்திவரதர் வழங்கிய பெயர்)....5)
12. ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் ஸ்ரீராமாநுஜருக்கு இட்டப்பெயர்....(5)
13. உடையவரை உலகிற்குத்தந்த உத்தமத் தாயார்.....(5)
16. தனது குருவான எதிராஜரைக் காப்பாற்ற கண்களை இழந்த சீடர்....(7)

**வலமிருந்து இடம்**

3. பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீராமாநுஜர் எழுதிய உரை நூல்....(5)
10. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஸ்ரீராமாநுஜாசாரியர் வைத்த பெயர்....(8)
11. தாசரதி என்ற இயற்பெயர் கொண்ட ....(7) தான் முதல் சீடர்
15. உலகு குருவான மகானை, மகனாகப் பெற்ற தந்தை....(7)
15. இராமாநுஜர்....(7) அம்சமாவார்

தொகுப்பு :
திரு. டி. ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கு விடை அறிய 23ம் பக்கம் பார்க்கவும்...

**மேலிருந்து கீழ்**

1. ஸ்ரீராமாநுஜரின் மகிமையால் சமண மதத்திலிருந்து வைணவத்திற்கு மாறிய மன்னன்.....(9)
2. எம்பெருமானாரின் மனைவி....(6)
3. எதிராஜர் பிறந்த ஊர்.....(7)
4. உடையவருக்கு திருக்கோட்டியூர் நம்பி இட்டப்பெயர்....(7)
5. .....(5) தீர்த்தம் எடுத்து, அத்திவரதருக்கு அபிஷேகம் செய்தார்.
6. ....(4) பட்டரை தனக்குப் பின் ஆசாரியராக எதிராஜர் நியமனம் செய்தார்.
9. ஸ்ரீராமாநுஜர் பிறந்த நட்சத்திரம்.....(5)

**கீழிருந்து மேல்**

7. எதிராஜர் எழுதிய பரமனின் திருவடியைப் பற்றும் விளக்க நூல்.....(5) கத்யம்.
8. ஆதிசேஷ அவதாரப் புருஷரை சரஸ்வதி தேவி அழைத்த பெயர்....(6)
9. ....(7)தலத்தில் ஆளவந்தாருக்குப் பிறகு ஆசாரியராக விளங்கி உடையவர் முக்தி பெற்றார்.
10. ஸ்ரீராமாநுஜர்....(7)தலத்தில் உள்ள இறைவன் விஷ்ணுவே என்று மெய்ப்பித்தார்
14. ......(9)மூலம் ஆறு வார்த்தைகளை அத்தி வரதர் எதிராஜருக்கு அருளினார்
17. உடையவருக்கு திருமந்திரத்தை உபதேசிக்க 18 முறை சோதனை செய்த ஆசாரியர்....(10)
18. தனக்குப்பின் ஸ்ரீராமாநுஜர் ஆசாரிய பீடத்தை அலங்கரிக்க விரும்பியவர்....(6)

அலசுவோம்... அறிவோம்... ஆதிகாவிய நாயகர்களை...

# துரோணாச்சாரியார்

திரு. எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம்
94861 39685



இரண்டு இதிகாசங்களின் காலங்களில் வாழ்ந்த இரண்டு வெவ்வேறு க்ஷத்திரியர்களின் குணநலன்களில்தான் எவ்வளவு வேறுபாடு.

*“ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி மற்(று) அவர்க்கு இன் அருள்சுரந்து”* என்று திரேதாயுகத்து நாயகனாகிய ஸ்ரீராமபிரானைக் குறித்துத் திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.

ஆனால், துவாபரயுகத்திலோ நடந்தது வேறு. பாரத்வாஜ முனிவரின் மகனாகிய துரோணர் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த துருபதனுடன், எதிர்காலத்தில் தான் அரசுபதவி ஏற்கும் பொழுது அவருக்குத் தன்னுடைய ராஜ்ஜியத்தில் பாதியைத் தருவதாகக் கூறினான். குருகுலவாசம் முடிந்து இருவரும் அவரவர் இல்லம் திரும்பினர்.

பிற்காலத்தில் கிருபாச்சாரியாரின் சகோதரி கிருபையை மணந்து, அஸ்வத்தாமன் என்ற மகனைப் பெற்ற துரோணர் வறுமையில் வாடினார். குடும்பத்தை வாழ்விக்கப் பொருள் தேட முயன்றவர், சிறுவயதில் துருபதன் கொடுத்த வாக்குறுதி நினைவுக்கு வர துரோணர் துருபதனின் பாஞ்சால தேசத்திற்குச் சென்றார். மன்னன் துருபதன் அளித்த வாக்குறுதியை நினைவூட்டினார்.

ஆனால் துருபதனோ, “ஏழை அந்தணராகிய உமக்கும் பேரரசனாகிய எனக்கும் இடையில் எவ்வாறு நட்பு நிலவ முடியும்? அறியாப் பருவத்தில் பாதி ராஜ்ஜியம் தருவதாக நான் கூறியதை நம்பி என்னெதிரே வந்து நிற்பதா? என்றெல்லாம் கூறி துரோணரை அவமானப் படுத்தினான்.

தம்மை அவமானப்படுத்திய துருபதனைப் பழி வாங்க முடிவு செய்து ஊர் திரும்பிய துரோணர், தம்முடைய அஸ்திரவித்தையின் சிறப்பை வெளிப் படுத்தி அஸ்தினாபுரத்தின் இளவரசர்களாகிய பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆசானாக நியமிக்கப்பட்டார்.

அஸ்திரவித்தைப் பயிற்சியின் முடிவில் அரச குமாரர்கள் குரு தக்ஷிணையாக என்ன வேண்டும் என்று கேட்டனர். அதற்கு, முன்னர் தம்மை அவமானப் படுத்திய துருபதனை வென்று உயிருடன் இழுத்து வந்து தம் முன்பு நிறுத்த வேண்டும் என்று துரோணர் கூறினார்.

அர்ஜுனன் தனது அஸ்திரவித்தையால் துருபதனைத்தோற்கடித்து இழுத்து வந்து தம் குருவாகிய துரோணரின் முன் நிறுத்தினான். துருபதன் செய்த நம்பிக்கை துரோகத்தை எடுத்துக் கூறியபின், துரோணர் அவனை ஒன்றும் செய்யாமல் மன்னித்து அனுப்பி விட்டார். இருப்பினும் இந்த நிகழ்ச்சியால் அவமானம் அடைந்த துருபதன் துரோணரைக் கொல்லக்கூடிய மகனைப் பெற விரும்பி விரதங்களை மேற்கொண்டான். அதன் பயனாக திருஷ்டத்யும்னன் என்ற பலசாலியான வீரமகனைப் பெற்றான். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான பகை வளர்ந்து மகா பாரதப் போர் மூண்டது.

துரோணர், பீஷ்மர் வீழ்ந்த பின்பு கௌரவப் படைகளின் சேனாதிபதியாகத் தலைமையேற்று வழி நடத்தினார். தொடர்ந்து கௌரவர் தரப்புக்குத்



## மங்கள சுலோகங்கள்

முரளீ கானவிநோத
வேதஸ்துதபூபாத।
நாராயண நாராயண நாராயண
நாராயண ஜய கோபாலஹரே ॥

**குழலிசைப்பிரியனே!**
**வேதங்களால் துதிக்கப்படுபவனே!**
**நாராயணனே! கோபால! ஹரி!**
**(உனக்கு) வெற்றி!**

தோல்விகளே கிடைத்ததால் மனம் நொந்த துரியோதனன் துரோணரின் நேர்மையையே அவ்வப்போது சந்தேகிக்கிறான். பாண்டவர்கள் மேல் உள்ள தனிப்பட்ட அன்பினால் துரோணர் சரியாகப் போரிடவில்லை என்பதை மரியாதை கலந்த கோபத்துடன் அவரிடம் சுட்டிக்காட்டுகிறான். இங்ஙனம், செஞ்சோற்றுக்கடன் தீர்க்க அநீதியின் பக்கம் நின்ற துரோணர் அதற்கான விலையாகத் தம்முடைய நேர்மையை சந்தேகிக்கப்படும் நிலையை அடைந்தார்.

ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் வழிகாட்டுதலின்படி, துரோணருடைய மகனின் பெயராகிய அஸ்வத்தாமா என்ற பெயர் கொண்ட யானையைத் தன் கதாயுதத்தால் கொன்றுவிட்டு, "நான் அஸ்வத்தாமனைக் கொன்று விட்டேன்" என்று துரோணரின் காதுக்குக் கேட்கும்படி உரக்கக் கூறினான்.

தம்முடைய மகன் மீது மிகுந்த பாசம் வைத்திருந்த துரோணர் "யுதிஷ்டிரா, என் மகன் அஸ்வத்தாமன் கொல்லப் பட்டானா?" என்று பதற்றத்துடன் கேட் டார். தம்முடைய மகன் அஸ்வத்தாமன் இறந்து விட்டான் என்று முடிவு செய்த துரோணர் மேற்கொண்டு உயிர் வாழ்வதில் விருப்பமின்றி ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுத் தேர்த் தட்டில் சோர்வுடன் அமர்ந்து விட்டார். இதற்காகவே காத்திருந்த திருஷ்டத்யும்னன் பாய்ந்து வந்து தன்னுடைய வாளால் துரோணருடைய தலையை அறுத்து வீழ்த்தினான்.

மாபெரும் வீரரும் செய்நன்றி மறவாதவருமாகிய துரோணாசாரியார், வாய்மை தவறிய மன்னன் துருபதனுடன் ஏற்பட்ட பகைமையினாலும், தீய நெறியில் சென்ற துரியோதனனை ஆதரித்த காரணத்தினாலும் மனவேதனை அடைந்து இறுதியில் தம்முடைய இன்னுயிரையே நீத்தார்.

"எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் தீய செயல் செய்பவர்களை ஆதரிப்பது கூடாது. அவ்வாறு ஆதரிப்பது இறுதியில் ஆபத்தையே விளைவிக்கும்" என்பதற்கு துரோணரின் சரித்திரமே சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

தொடர்ந்து அலசுவோம்...

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 81க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | சி | ஷ் | பா | த் | வை | 2 த | ம் | ய | ஷ் | பா | 3 ஸ்ரீ |
| ட் | 4 எ | தி | ரா | ஜ | ர் | ஞ் | க | ம் | பி | | பெ |
| ட | ம் | க | | 5 சா | ர | ச | ங் | ட | ம் | பி | ரு |
| ல | பெ | ணா | 6 ப | லை | கா | ம் | ர | க | ந | ம் | ம் |
| ரா | ரு | ர | ரா | கி | ய | மா | வ | ங் | சி | ந | பு |
| ய | மா | 7 ச | ச | ண | ஷ் | ள் | ரு | வே | ச் | ர் | தூ |
| தே | னா | | ர | று | 8 பா | | 9 தி | ரு | க | யூ | ர் |
| வ | ர் | தா | த் | ல | கு | க் | ரு | 10 தி | க் | டி | தா |
| ன் | பா | ண் | யா | லி | த | 11 மு | வா | | ரு | ஷ் | ந் |
| 12 உ | டை | ய | வ | ர் | 13 கா | ந் | தி | ம | 14 தி | கோ | வ |
| ஜி | யா | ம | சோ | வ | ச | 15 கே | ரை | | | ரு | ள |
| | 16 கூ | ர | த் | தா | ழ் | வா | ன் | ஷ | சே | 17 தி | 18 ஆ |

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்





புண்ணிய பூமி, கர்ம பூமி எனப் படும் பாரத தேசத்தில் ஆரண்யம் என்னும் பெயருடைய பிரதேசங்கள் பல உள்ளன. அவற்றுள் நைமி சாரண்யம், தண்டகாரண்யம் போன்ற பிரதேசங்கள் புராண இலக்கியங்களில் சிறப்பிடம் பெற்றிருந்தன. மேலும், தமிழ் நாட்டில் வேதாரண்யம் எனும் பெயருடைய ஊரும் உள்ளது. இம்மூன்றிலும் நைமிசாரண்யம் ரிஷிகளுக்கும், முனிவர்களுக்கும், யோகிகளுக்கும் வாழ்விடமாகும். அங்குள்ள முனிவர்கள் யாவரும் அறிவார்ந்தவர்கள், விவேகமுடையவர்கள், தர்ம சிந்தனையுடையவர்கள், அவர்கள் எப்பொழுதும் உலக நலனை விரும்புபவர்கள். அங்கே சௌனகாதி முனிவர்கள் சூத மகரிஷியை மிகவும் கௌரவித்து போற்றி வணங்கி தமக்கு உண்டாகும் ஐயப்பாடுகள் பலவற்றையும் நிவர்த்தி செய்து கொள்வார்கள். சூத மகரிஷியும் கேட்போரின் ஆவலை மனதில் கொண்டு அவர்களின் ஐயங்களைப் போக்குவதற்குக் கதை வாயிலாக வேத புராண இதிகாசங்களில் உள்ள ஆழ்ந்த கருத்துகளைச் செறிவாகவும், அழகாகவும் எடுத்துக் கூறுவார். இது நைமிசாரண்யத்தில் தொடர்ந்து நடந்து வரும் ஞான வேள்வி ஆகும்.

ஒரு நாள் சௌனகாதி முனிவர்கள் சூத மகரிஷியிடம் அறிவுப் பேரொளியே! உங்களுடைய உபன்யாசத்தால் சனாதன தர்மத்திற்குத் தொடர்பான பல அரிய செய்திகளை நாங்கள் அறிந்து கொள்ள முடிந்தது. இருப்பினும் எங்களுக்கு மேலும் ஒரு ஐயப்பாடு உள்ளது. பூலோகத்தில் மஹாவிஷ்ணு அர்ச்சாவதார மூர்த்தியாகி சாமான்ய மக்களும் நன்கு கண்டு களிக்கும் விதமாக 108 திவ்ய தேசங்களிலும் இருந்து அருள்பாலிக்கிறார் அல்லவா? அவற்றுள் ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், தோதாத்ரி, சாளகிராமம், நைமிசாரண்யம், பத்ரிகாசிரமம், காஞ்சிபுரம், வேங்கடாசலம் என்னும் எட்டுத் திவ்ய தேசங்களை சுயம்பு திவ்ய தேசங்கள் எனக் கூறுகிறார்கள் அல்லவா? இந்த எட்டுத் திவ்ய தேசங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த திவ்ய தேசம் எது என்பதை அறிந்து கொள்ள ஆவலாக உள்ளது. இந்த எட்டுத் திவ்ய தேசங்களில் அனைவரும் எளிதில் சென்று தரிசிக்கும் விதமாகவும், எளியோர்க்கு வசதியாகவும், சேவிக்கும் பக்தர்களின் பலவகைப்பட்ட கோரிக்கைகளை தீர்த்து வைக்கும் திவ்ய தேசம் எது என்பதை அறிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறோம். எனவே தாங்கள் கருணை கூர்ந்து அத்திவ்ய தேசத்தைப் பற்றி எடுத்துக் கூறும்படி கேட்டுக் கொள்கிறோம். எங்கள் கோரிக்கையை நீங்கள் ஏற்க வேண்டும் என்று பணிவுடன் கூறினர். மேலும், அர்ச்சாவதார மூர்த்திகளுக்குத் தொடர்பான வரலாற்றையும் உங்கள் வாயால் சொல்ல நாங்கள் கேட்க வேண்டும் என்றனர்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.



சூதமகரிஷி, சௌனகாதி மஹா முனிவர்களை ஒரு முறை நன்கு உற்றுப்பார்த்தார். அவர்களிடத்தில் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வப் பெருக்கத்தைக் கண்டு கொண்டார். பின்பு, தவச்சீலர்களே! அளவு கடந்த தேவதேவனின் சரித்திரத்தை நான் ஒருவன் மட்டுமே சொல்லி விட முடியுமா? நான் எவ்வளவு? என் சக்தி எவ்வளவு? இருந்தாலும், ஸ்ரீவேதவியாசரின் எல்லையற்ற கருணையால் எனக்குத் தெரிந்த அளவில் நிச்சயம் உங்களுக்கு விவரித்துக் கூறுகிறேன். நீங்கள் கூறிய எட்டு சுயம்பு திவ்ய தேசங்களில் "வேங்கடாசலமே" மிகவும் சிறப்புடையது. அந்தத் திவ்ய தேசம் ஒன்றே இகம் பரம் இரண்டிற்கும் நல்ல பலன்களைத் தரதக்கது. இதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. மேலும், ஸ்வேதவராஹ கல்பத்தில் மஹா விஷ்ணு வைகுண்டத்தை விட்டு சேஷாத்திரியில் வந்து நிலைப் பெற்ற அந்த வரலாற்றை உங்களுக்குச் சொல்கிறேன் கேளுங்கள்.

ஸ்ரீமந்நாராயணனின் நாபிக் கமலத்திலிருந்து நான்கு முகங்களோடு பிரம்மா அவதரித்தார். அனைத்து உலகத்தை காப்பவரும், படைப்புக்குக் காரணமானவருமான ஸ்வாமியின் கட்டளைப்படி பிரம்மா உலக உயிர்களைப் படைக்கத் தொடங்கினார். அதோடல்லாமல் எவ்வித தாமதமுமின்றி ஓய்வு இல்லாமலும் படைக்கத் தொடங்கினார். படைப்புத் தொழில் தொடரும் வரையில் சூரியனாகட்டும், வாயுவாகட்டும், அக்னியாகட்டும், வருணனாகட்டும் அவரவர்கள் எல்லையில் இருக்கும்படி பார்த்துக் கொள்வது மட்டுமல்லாமல், அவற்றை காவலாக இருக்கும் படியும் உண்டாக்கினார். இவ்வாறாகப் படைப்புத் தொழில் தடையின்றி 14 மன்வந்திரங்கள் கடந்தது. இத்தனை ஆண்டுகள் பிரம்மாவிற்கு ஒரு பகல் பொழுதாகும். அந்தப் பகல் பொழுது முடிந்தவுடன் இரவு தொடங்கியதும் பிரம்மாவிற்குச் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் எனத் தோன்றியது. உறக்க தேவதை அந்தத் தேவ தேவனை வந்து தழுவிக் கொண்டாள். பிரம்மாவும் உறக்கத்தில் நழுவினார்.

தொடரும்....





## திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்

வஸந்த காலமான சித்திரை மாதத்தில் அனைத்து ஆலயங்களிலும் வஸந்த உற்சவம் என்ற சிறப்பு உத்ஸவம் நடை பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் முக்கியமான உத்ஸவமாகும். ஆலய சம்பிரதாயப்படி வஸந்தோத்ஸவம் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. திருமலையில் சைத்ர மாத வளர்பிறை திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று நாட்கள் வஸந்தோத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெறும். வசந்தோத்ஸவ மண்டபத்தில் வருடாந்திர வஸந்தோத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த மூன்று நாட்களும் வஸந்த மண்டபத்தில் சிறப்பு ஸ்நபன திருமஞ்சனம், தீபாராதனைக்குப் பின்னர் உத்சவ மூர்த்திகள் மாட வீதிகள் வழியாக மீண்டும் ஆலயத்திற்குள் எழுந்தருளுகின்றனர்.




– முனைவர் பா.காயத்ரி,
சென்னை.

"அக்ஷய திருதியை". வஸந்த ருது காலத்தில் "வைசாக" மாதம் சுக்ல பக்ஷ திருதியை தினத்தன்று கொண்டாடப்படுகிறது.

"அக்ஷய" என்றால் "குறைவில்லாத" என்ற பொருளுக்கேற்ப, குறைவில்லாத செல்வத்தையும், வளர்ச்சியையும் தரும் நாளாக அக்ஷய திருதியைக் கருதப்படுகிறது. சாதாரணமாக, இத்தினத்தில் தங்கம் வாங்கினால் வீடு, செல்வ செழிப்புடனும் சௌபாக்யத்துடனும், ஐஸ்வர்யத்துடனும் விளங்கும் என்றும், அதிக வரவு ஏற்படும் என்றும், லக்ஷ்மி தேவியின் கடாக்ஷம் கிடைக்கும் என்றும் நம்பப்படு கிறது. தங்கம், கரும்புச் சாறு முதலியன தானம் செய்வது மிகவும் விசேஷமாகும்.

இதிஹாசத்தின்படி, பஞ்ச பாண்டவர்கள் சூதாட்டத்தில் ராஜ்ஜியத்தை இழந்து வனவாசம் சென்றார்கள்.அப்போது ஒவ்வொருவரும் தனது இஷ்ட தெய்வத்தை நோக்கித் தவம் புரிந்து, கௌரவர்களை வெல்ல அஸ்த்திரங்களைப் பெறச் சென்றார்கள். தர்மபுத்திரனோ அதிதிகளின் உபச ரிப்பே தவமாக செய்து வர எண்ணி, அதற்கு தன்னி டம் எப்போதும் உணவிருக்க வேண்டுமென்று நினைத்து சூரிய பகவானை நோக்கித் தவம் புரிந்தா ராம். அதனால் அகமகிழ்ந்த சூரிய தேவன், யுதிஷ்டிர னுக்கு அளவில்லாத எண்ணிய உணவு தரவல்ல "அக்ஷய பாத்திரத்தை" அளித்தாராம். அத்தினமே அக்ஷய திருதியை தினமாக அனுசரிக்கப்படுகிறது.

விஷ்ணு அவதாரமான "பரசுராமரின்" ஜன்ம தினமாகவும் நம்பப்படுகிறது. மேலும், வியாச முனி மகாபாரதத்தை ஸ்ரீமகாகணபதி எழுத கூறலானார். ஒரு கதைப்படி இத்தினத்தில்தான் சுதாமர் ஸ்ரீகிருஷ்ணரைக் காண துவாரகை சென்றதாகவும், அங்கு அவருக்கு அளவில்லா செல்வம் பகவான் அருளியதாகவும் கூறப்படுகிறது. அக்ஷய திருதியை அன்றுதான் "குபேரன்" செல்வங்களுக்கெல்லாம் அதிபதியாக நியமிக்கப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. மேலும், இந்நாளில்தான் கங்கா தேவி பூமியில் இறங்கினாள் எனவும் நம்பப்படுகிறது.

பூரியில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஜகந்நாதர் கோயிலின் இரத யாத்திரைக்கு அக்ஷய திருதியை அன்றுதான் இரத நிர்மாணப் பணி துவங்கப்படு கிறது. மேலும், கொடும் பனிபொழிந்த பிறகு அக்ஷய திருதியை நாளில்தான் "கங்கோத்ரி", "யமுனோத்ரி" கோயில்கள் திறக்கப்படுகின்றன. ஆந்திராவிலுள்ள சிம்ஹாசலம் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியின் சந்தனோத் ஸவம்/நிஜரூப தரிசனம் இந்நாளில்தான் கிடைக்கும். (ஏனெனில் ஆண்டு முழுவதும் ஸ்வாமி சந்தன காப்புடனே காணப்படுவார்).இவ்வருடம் ஏப்ரல் மாதம் "அக்ஷய திருதியை" கொண்டாடப் படவுள்ளது. எனவே, பக்தர்களாகிய நாமும், இத்தினத்தில் பகவானை வழிபடுவோம்! அவன் அருளைப் பெறுவோம்.

# கங்கா ஸ்தோத்ரம்



தேவி! ஸுரேச்வரி! பகவதி! கங்கே! த்ரிபுவனதாரிணி தரளதரங்கே ।
சங்கரமௌளி விஹாரிணீ! விமலே! மம மதிராஸ்தாம் தவ பதகமலே ॥ 1

பாகீரதி ஸுகதாயினி மாத: தவ ஜலமஹிமா நிகமே க்யாத: ।
நாஹம் ஜானே தவ மஹிமானம் பாஹி க்ருபாமயி! மாமஜ்ஞானம் ॥ 2

ஹரிபதபாத்யதரங்கிணி: கங்கே ஹிமவிது முக்தாதவள தரங்கே ।
தூரீகுரு மம துஷ்க்ருதிபாரம் குரு க்ருபயா பவஸாகரபாரம் ॥ 3

தவ ஜலமமலம் யேன நிபீதம் பரமபதம் கலு தேன க்ருஹீதம் ।
மாதர்கங்கே! த்வயி யோ பக்த: கில தம் த்ரஷ்டும் ந யம: சக்த: ॥ 4

பதிதோத்தாரிணி! ஜாஹ்னவி! கங்கே! கண்டித கிரிவரமண்டித பங்கே ।
பீஷ்மஜனநி! ஹே! முனிவரகன்யே! பதிதனிவாரிணி! த்ரிபுவன தன்யே ॥ 5

கல்பலதாமிவ பலதாம் லோகே ப்ரணமதி யஸ்யாம் ந பததி சோகே ।
பாராவாரவிஹாரிணி! கங்கே! விமுக யுவதி க்ருத தரளாபாங்கே ॥ 6

தவ சேன்மாத: ஸ்ரோத ஸ்னாத: புனரபி ஜடரே ஸோऽபி ந ஜாத: ।
நரகநிவாரிணி! ஜாஹ்னவி! கங்கே! கலுஷவினாசினி! மஹிமோத்துங்கே॥ 7

புனரஸதங்கே புண்யதரங்கே ஜய ஜய ஜாஹ்னவி கருணாபாங்கே ।
இந்த்ரமகுடமணிராஜித சரணே! ஸுகதே சுபதே! ப்ருத்யசரண்யே ॥ 8

ரோகம் சோகம் தாபம் பாபம் ஹர மே பகவதி குமதி கலாபம் ।
த்ரிபுவன ஸாரே வஸுதாஹாரே த்வமஸி கதிர்மம கலு ஸம்ஸாரே ॥ 9

அலகானந்தே! பரமானந்தே! குரு கருணாமயி காதரவந்த்யே ।
தவ தடனிகடே யஸ்ய நிவாஸ: கலு வைகுண்டே தஸ்ய நிவாஸ: ॥ 10

வரமிஹ நீரே கமடோ மீன: கிம்வா தீரே சரட: க்ஷீண: ।
அத வாச்வபசோ மலினோ தீன: தவ நஹி தூரே ந்ருபதிகுலீன: ॥ 11

போ புவனேச்வரி புண்யே தன்யே தேவி த்ரவமயி முனிவரகன்யே ।
கங்கா ஸ்தவமிதமமலம் நித்யம் படதி நரோய: ஸ ஜயதி ஸத்யம் ॥ 12

யேஷாம் ஹ்ருதயே கங்கா பக்தி: தேஷாம் பவதி ஸதா ஸுக முக்தி: ।
மதுராகான்தா பஞ்ஜடிகாபி பரமானந்த கலிதலலிதாபி:॥ 13

கங்கா ஸ்தோத்ரமிதம் பவஸாரம் வாஞ்சிதபலதம் விமலம் ஸாரம் ।
சங்கரசேவக சங்கர ரசிதம் படதி ஸுகீ ஸ்தவ இதி ச ஸமாப்த: ॥ 14

॥ இதி ஸ்ரீமச்சங்கராசாரிய விரசிதம் கங்கா ஸ்தோத்ரம் சம்பூர்ணம் ॥

# நாமராமாயணம்

## பாலகாண்டம்




01. ஸுத்த ப்ரஹ்ம பராத்பர ராம
02. காலாத்மக பரமேச்வர ராம
03. சேஷதல்பஸுகனித்ரித ராம
04. ப்ரஹ்மாத்யமர ப்ரார்தித ராம
05. சண்ட கிரணகுல மண்டன ராம
06. ஸ்ரீமத்தசரத நந்தன ராம
07. கௌஸல்யா ஸுகவர்தன ராம
08. விச்வாமித்ர ப்ரியதன ராம
09. கோர தாடகாகாதக ராம
10. மாரீசாதி நிபாதக ராம
11. கௌசிக மக ஸம்ரக்ஷக ராம
12. ஸ்ரீமதஹல்யோத்தாரக ராம
13. கௌதமமுனி ஸம்பூஜித ராம
14. ஸுர முனிவர கணஸம்ஸ்துத ராம
15. நாவிக தாவித ம்ருதுபத ராம
16. மிதிலா புரஜன மோஹக ராம
17. விதேஹ மானஸ ரஞ்ஜக ராம
18. த்ரயம்பக கார்முக பஞ்ஜக ராம
19. ஸீதார்பித வரமாலிக ராம
20. க்ருத வைவாஹிக கௌதுக ராம
21. பார்கவ தர்ப வினாசக ராம
22. ஸ்ரீமதயோத்யா பாலக ராம



## அயோத்யாகாண்டம்

23. அகணித குணகண பூஷித ராம
24. அவனீ தனயா காமித ராம
25. ராகா சந்த்ர ஸமானன ராம
26. பித்ரு வாக்யாச்ரித கானன ராம
27. ப்ரிய குஹ வினிவேதித பத ராம
28. தத் க்ஷாலித நிஜம்ருதுபத ராம
29. பரத்வாஜ முகானந்தக ராம
30. சித்ரகூடாத்ரி நிகேதன ராம
31. தஸரத ஸந்தத சிந்தித ராம
32. கைகேயீ தனயார்தித ராம
33. விரசித நிஜ பித்ருகர்மக ராம
34. பரதார்பித நிஜபாதுக ராம






## ஆரண்யகாண்டம்

35. தண்டகாவனஜன பாவன ராம
36. துஷ்ட விராத வினாசன ராம
37. சரபங்க ஸுதீக்ஷார்சித ராம
38. அகஸ்த்யானுக்ரஹ வர்தித ராம
39. க்ருத்ராதிப ஸம்ஸேவித ராம
40. பஞ்சவடீ தட ஸுஸ்தித ராம
41. சூர்பணகார்த்தி விதாயக ராம
42. கரதூஷண முகசூதக ராம
43. ஸீதாப்ரிய ஹரிணானுக ராம
44. மாரீசார்தி க்ருதாசுக ராம
45. வினஷ்ட ஸீதான்வேஷக ராம
46. க்ருத்ராதிப கதிதாயக ராம
47. சபரீதத்த பலாசன ராம
48. கபந்த பாஹுச்சேதன ராம

## கிஷ்கிந்தா காண்டம்

49. ஹனுமத்ஸேவித நிஜபத ராம
50. நத ஸுக்ரீவாபீஷ்டத ராம
51. கர்வித வாலி ஸம்ஹாரக ராம
52. வானரதூத ப்ரேஷக ராம
53. ஹிதகர லக்ஷ்மண ஸம்யுத ராம

**இராமாயணத்தை நூற்றியெட்டு வரிகளில் விவரிக்கப்பட்டுள்ள நாமராமாயணம் சாம்பரதாயமாக வரும் ஸ்தோத்திரம். இந்த திவ்ய ஸ்தோத்திரத்தை துதித்தால் இராமாயணம் பாராயணம் செய்ததற்கான பலன் கிடைக்கும். ஏப்ரல் 26 அன்று ஸ்ரீராமஜயந்தியை முன்னிட்டு "ஸப்தகிரி" வாசகர்களுக்காக...**




## சுந்தர காண்டம்

54. கபிவர ஸந்தத ஸம்ஸ்ம்ருத ராம
55. தத்கதி விக்னத்வம்ஸக ராம
56. ஸீதா ப்ராணாதாரக ராம
57. துஷ்ட தசானன தூஷித ராம
58. சிஷ்ட ஹனுமத்பூஷித ராம
59. ஸீதாவேதித காகாவன ராம
60. க்ருத சூடாமணிதர்சன ராம
61. கபிவர வசனாச்வாஸித ராம


## யுத்த காண்டம்

62. ராவண நிதன ப்ரஸ்தித ராம
63. வானரஸைன்ய ஸமாவ்ருத ராம
64. சோஷித ஸரித்சார்தித ராம
65. விபீஷணாபய தாயக ராம
66. பர்வதஸேது நிபந்தக ராம
67. கும்பகர்ண சிரச்சேதக ராம
68. ராக்ஷஸஸங்க விமர்தக ராம
69. அஹிமஹிராவண சாரண ராம
70. ஸம்ஹ்ருத தசமுக ராவண ராம
71. விதிபவ முகஸுர ஸம்ஸ்துத ராம
72. கஸ்தித தசரத வீக்ஷித ராம
73. ஸீதாதர்சன மோதித ராம
74. அபிஷிக்த விபீஷணனத ராம
75. புஷ்பக யானாரோஹண ராம
76. பரத்வாஜாபி நிஷேவண ராம
77. பரதப்ராண ப்ரியகர ராம
78. ஸாகேதபுரி பூஷண ராம
79. ஸகல ஸ்வீய ஸமானத ராம
80. ரத்னலஸத்பீடாஸ்தித ராம
81. பட்டாபிஷேகாலங்க்ருத ராம
82. பார்திவகுல ஸம்மானித ராம
83. விபீஷணார்பித ரங்கக ராம
84. கீசகுலானுக்ரஹகர ராம
85. ஸகலஜீவஸம்ரக்ஷக ராம
86. ஸமஸ்த லோகாதாரக ராம



## உத்தரகாண்டம்

87. ஆகத முனிகண ஸம்ஸ்துத ராம
88. விச்ருத தசகண்டோத்பவ ராம
89. ஸீதாலிங்கன நிர்வ்ருத ராம
90. நீதி ஸுரக்ஷித ஜனபத ராம
91. விபின த்யாஜித ஜனகஜ ராம
92. காரித லவணாஸுரவத ராம
93. ஸ்வர்கத சம்புக ஸம்ஸ்துத ராம
94. ஸ்வதனய குசலவ நந்தித ராம
95. அச்வமேத க்ரது தீக்ஷித ராம
96. காலாவேதித ஸுரபத ராம
97. ஆயாஜகஜ்ஜன முக்தித ராம
98. விதிமுக விபுதானந்தக ராம
99. தேஜோமய நிஜரூபக ராம
100. ஸம்ஸ்க்ருதி பந்த விமோசக ராம
101. தர்மஸ்தாபன தத்பர ராம
102. பக்திபராயண முக்தித ராம
103. ஸர்வசராசர பாலக ராம
104. ஸர்வபவாமய வாரக ராம
105. வைகுண்டாலய ஸம்ஸ்தித ராம
106. நித்யானந்த பதஸ்தித ராம
107. ராம ராம ஜய ராஜா ராம
108. ராம ராம ஜய ஸீதா ராம








19-02-2023 அன்று திருமலையில் உள்ள புரசைவாரி (அனந்தாழ்வான்) தோட்டத்தில் நடைபெற்ற ஸ்ரீஅநந்தாழ்வானின் 969 வது அவதார உத்ஸவத்தில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள்




20-02-2023 அன்று ஸ்ரீகாளஹஸ்தியில் ஸ்ரீஞானபிரசுனாம்பிகா சமேத ஸ்ரீகாளஹஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கல்யாணத்தை முன்னிட்டு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்கள் சமர்ப்பித்த தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ. வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். தம்பதியினர் மற்றும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள்





14-02-2023 அன்று ஸ்ரீசைலம் ஸ்ரீபிரமராம்பா மல்லிகார்ஜுன ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்களை சமர்ப்பித்த தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் (திருப்பதி) திரு. வி. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். தம்பதியினர் மற்றும் உயர் அதிகாரிகள்




27-02-2023 அன்று திருப்பதி ஸ்ரீபத்மாவதி குழந்தைகள் ஹ்ருதயாலயம் மருத்துவமனையில் சென்னையில் இருந்து தானமாகப் பெறப்பட்ட இதயத்தை 13 மாத குழந்தைக்கு இருதய மாற்று சிகிச்சை மூலம் உயிர் கொடுத்த மருத்துவக் குழுவினருடன் தி.தி.தே. செயலாட்சித்தலைவர், தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (எச்.&இ.)

தொண்டரடிப் பொடியாழ்வார் தவிர எல்லா ஆழ்வார்களும் மங்களாசாசனம் செய்த இடம் திருவேங்கடம். தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத்தை மட்டும் மங்களாசாசனம் செய்திருக்கிறார் என்பார்கள். உண்மைதான். அந்தத் திருவரங்க நாதனே திருவேங்கடநாதன் தான் என்பதை திருப்பாணாழ்வார் அழகாகக் காட்டுகின்றார்.

*"மந்திபாய் வடவேங்கட மாமலை*
*வானவர்கள் சந்தி செய்ய நின்றான்*
*அரங்கத் தரவின் அணையான்"*

எனவே பதின்மர் பாடிய பெருமாள் என்பது திருவேங்கட நாதனுக்கும் பொருந்தும். நம்மாழ்வார் திருவாய்மொழியை துவய மந்திரத்தின் சாரம் என்று சொல்வார்கள். துவயம் எனப்படும் மந்திரம்.

*"ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் பிரபத்யே*
*ஸ்ரீமதே நாராயணாய நம:"*

திருமால் திருவைகுண்டத்தில் பிராட்டிக்கு இந்த மந்திரத்தை உபதேசித்து அருளினார். இதன் பொருள்,

பிராட்டியுடன் கூடிய பெருமாளின் உபய திருவடியை உபாயமாகப் பற்றி இருவரின் சேர்த்தியிலே கைங்கர்யம் செய்ய வேண்டும். அதைத்தான் நம்மாழ்வார் தம்முடைய சரம பிரபந்தமான திருவாய்மொழியில் தெரிவிக்கின்றார்.

*"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்*
*மங்கை உறை மார்பா*
*நிகர் இல் புகழாய் உலகம் மூன்று உடையாய்!*
*என்னை ஆள்வானே*
*நிகர் இல் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்*
*திருவேங்கடத்தானே*
*புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ்*
*அமர்ந்து புகுந்தேனே."*

துவய மந்திரத்தின் சுருக்கம் தான் திருமந்திரம். அந்த திருமந்திரத்தின் நாராயணாய சப்தத்தின் விரிவு தான் பெரிய திருமொழி.நம்மாழ்வாரின் திருவாய்மொழியை அடியொற்றி பாசுரங்களைப் பாடி அருளிச் செயலை நிறைவு செய்தவர் திருமங்கையாழ்வார். நம்மாழ்வார், யாரிடத்தில் போய் சரணடையச் சொன்னாரோ, அந்த வேங்கடவனைச் சரணடைய வேண்டும் என்பதற்காகவே, தாம் சரண் அடைவதற்கு முன்னால், தம்முடைய நெஞ்சினை வேகமாக அனுப்பியவர் திருமங்கையாழ்வார்.

பெரிய திருமொழியில் முதல் பத்து, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது திருமொழியிலும், இரண்டாம் பத்து முதல் திருமொழியிலும் இதை அழுத்தமாகத் தெரிவிக்கின்றார் திருமங்கை ஆழ்வார்.

*"கோயில் கொண்ட கண்ணார் விசும்பிடை*
*அமர நாயகற்கு இன்று அடிமைத் தொழில்*
*பூண்டாயே"*



# வேங்கடவனைப் பாடினால் பாவங்கள் பறக்கும் புண்ணியங்கள் சிறக்கும்

*– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,*
*புவனகிரி.*

## பிளாஸ்டிக் தடை

**திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்திர தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்கள் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள்.**

என்று பாடி அருளிச் செய்திருக்கிறார். திருவேங்கடம் முதல் பதிகத்தில் தான் போவதற்கு முன் தன்னுடைய நெஞ்சை அனுப்புகின்றார்.

*"திலதம் உலகுக்காய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானே"* என்று நம்மாழ்வார் சொன்னார் அல்லவா?அதை அப்படியே திருமங்கை ஆழ்வார்,

*"வாச மா மலர்நாறுவார் பொழில்*
*சூழ் தரும் உலகுக்கு எல்லாம்*
*தேசமாய் திகழும் மலைத்*
*திருவேங்கடம் அடை நெஞ்சமே"*

என்று வழிமொழிகின்றார். திருவேங்கடத்திற்கு திருமங்கையாழ்வார் செல்வதற்கு முன் அவர் நெஞ்சம் சென்று விட்டது. ஆழ்வாரின் வருகையை அவருடைய நெஞ்சு எம்பெருமானிடம் தெரிவித்து விட்டது.

அடுத்த பதிகத்தில் இவரே,

*"விண்ணார் நீள் சிகர விரையார் திரு*
*வேங்கடவா*
*அண்ணா, வந்தடைந்தேன் அடியேனை*
*ஆட்கொண்டருளே"*

என்று கதறுகின்றார்.

காரணம் அவன் திருவடிகளில் விழுந்து விட்டால் பாவங்கள் பறந்து விடும்.பொதுவாக சாத்திரங்களில் தூலமான பகுதிகளும் உண்டு. சூட்சுமமான பகுதிகளும் உண்டு. எது பாவம்? எது புண்ணியம்? என்பதற்கு நுட்பமான விளக்கங்கள் உண்டு.

நாம் நல்ல காரியங்களைச் செய்து விட்டால் அதனால் புண்ணியம் கிடைத்து விடும் என்று நம்புகின்றோம் அது உண்மைதான்.

உதாரணமாக ஒருவன் நிறைய தான தர்மங்களைச் செய்து விட்டான். அதன் புண்ணிய பலனாக பல காலம் சொர்க்க உலகத்தை அனுபவித்து விட்டு மண்ணுலகில் மிகப் பெரிய செல்வந்தனாகப் பிறக்கின்றான். இத்தனை செல்வங்களோடு பிறந்தா

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*கப்யாஸசப்$_3$த$_3$ஸ்ய வத$_3$த்யபார்த்தம் தஸ்மிந்*
*தத$_3$ப்$_4$யங்க$_3$க்ருத: கத$_3$ாசித் ।*
*ராமானுஜஸ்யாச்ரு ததூ$_3$ருத$_3$ாஹி த்$_3$ருஷ்ட்வாꜱꜱசு*
*ஸோꜱப்யுந்முக$_2$ஸம்ப்$_4$ரமோꜱபூத் ॥*
(21)

**ஒரு சமயம் "கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ" என்று பரமாத்மாவின் திருக்கண்களை வர்ணிக்கும் சாந்தோக்ய வாக்யத்திற்கு,**



**"குரங்கின் ஆஸன வாய்போல் சிவந்த தாமரை போன்ற கண்களை உடையவன் பரமபுருஷன்" என்று யாதவர் அவப்பொருள் கூறுகையில், யாதவருக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்த இராமாநுஜரின் துன்பக் கண்ணீர் விழுந்து யாதவரின் தொடையைச் சுட்டது. அதைக்கண்ட யாதவர் உடனே நிமிர்ந்து பார்த்துப் பரபரப்படைந்தார்.**

**– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது**

லும் அவன் ஆன்மாவுக்கு நன்மையான சத் விஷயமான எம்பெருமானை அறியவில்லை என்று சொன்னால், ஐச்வர்யங்களோடு வாழும் அவனுடைய வாழ்க்கை கூட பாவ வாழ்க்கை தான்.

அதனால்தான் திருமங்கை ஆழ்வாரே தம்முடைய கீழ்கால வாழ்க்கையை,

*"கொன்றேன் பல் உயிரை குறிக்கோள்*
*ஒன்று இலாமையினால்*
*என்றேனும் இரந்தார்க்கு இனிது ஆக*
*உரைத்து அறியேன்*
*குன்று ஏய் மேகம் அதிர் குளிர் மா மலை*
*வேங்கடவா*
*அன்றே வந்து அடைந்தேன் அடியேனை*
*ஆட் கொண்டருளே."*

என்று பாடுகின்றார். வைணவ சமயத்தைப் பொறுத்தவரை எம்பெருமானை அடைவ தற்குத் தடையாக இருக்கக் கூடியவை எதுவாக இருந்தாலும் அது பாவங்கள் தான். அத்தகைய பாவங்கள் போய்விடும் என்பதையே திருவேங்கட பதிகத்தின் இந்தப் பாசுரத்தில் பலச் சுருதியாக வைத்து திருமங்கை ஆழ்வார் பாடுகின்றார்.

*"கண்ணாயேழுலகுக்கு உயிராயவெங்கார்*
*வண்ணனை,*
*விண்ணோர்த்தாம்பரவும் பொழில் வேங்கட*
*வேதியனை*
*திண்ணார்மாடங்கள் சூழ் திருமங்கையர்க்*
*கோன் கலியன்*
*பண்ணார்ப்பாடல்பத்தும் பயில்*
*வார்க்கில்லை பாவங்களே"*

இறைவன் ஏழு உலகுக்கும் கண்ணாக விளங்குபவன். ஏழ் என்பது எல்லா உலகம் என்று பொருள் தரும். எல்லா இசையும் ஏழ் இசையில் அடங்கி இருக்கிறது அல்லவா? அப்படி எல்லா உலகம் என்பதைத்தான் ஏழ் உலகம் என்று சொல்லுகின்றோம். ஏழு என்பதன் பெயரடை வடிவம்.

அடுத்து கண்ணைப் போல் காக்கின்றான். கண் என்பதற்கு இடம் என்ற பொருளும் உண்டு. கண்ணன் என்றால் எல்லா இடமும் பரந்து இருப்பவன். கண்ணென்றால் ஒளி என்று ஒரு பொருள் உண்டு. சூரியன் என்று ஒரு பொருள் உண்டு. புருஷ சூக்தத்திலே சூரியனை இறைவனின் கண்ணாக வர்ணிக்கிறார்கள்.

எல்லா உலகுக்கும் சாட்சியாக விளங்குபவன் இறைவன். இங்கே எல்லா உலகத்தையும் கண்ணைக் காப்பது போல் காப்பவன் என்கின்ற பொருள்படும். அது மட்டும் இல்லை. நாராயண சப்தத்தின் விரிவும் மிக அழகாக சொல்வதற்கு அடுத்த பதத்தை "உயிராகிய" என்று போடுகின்றார்.

உடம்பு ஸ்தூலமானது. உயிர் சூட்சுமமானது. உடம்பின் அசைவைக்கொண்டுதான் உயிரை உணர்ந்து கொள்ள முடியும். பிரபஞ்சத்தின் அசைவுகளைக் கொண்டுதான் எம்பெருமானின் இருப்பைத் தெரிந்து கொள்ள முடியும். "சேதன அசேதனங்களைத் தனக்கு உடலாகக் கொண்டிருப்பவன் இறைவன்" என்கின்ற பொருளும் இங்கே வந்து விடும். இதை நம் ஆழ்வார்

*"திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவைமிசைப்*
*படர் பொருள் முழுவதும் ஆய் அவை அவைதொறும்*
*உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும்*
*பரந்துளன்*
*சுடர் மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே."*

என்று பாடுகின்றார். திருமங்கையாழ்வார் உயிராய வெங்கார் வண்ணனை என்று பாடுகின்றார். அடுத்து, அவன் மேகம் போன்ற நிறத்தை உடையவன், மேக வண்ணன், கார்மேனி செங்கண் என்று ஆண்டாள் பாடுகிறாள். இதற்கு அடுத்தபடியாக *"விண்ணோர்த்தாம் பரவும் பொழில் வேங்கட வேதியனை"* என்று சொல்கின்றார்.

நித்யசூரிகள் தினம் வந்து துதிக்கக் கூடிய இடமான திருமலையிலே எழுந்திருப்பவன். இங்கே திருமலை

**பண்பாட்டு ஆடை**

- திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.

என்பதால் துவய மந்திரத்தின் ஸ்ரீ என்ற சப்தத்தின் விளக்கமும் வந்துவிடுகிறது.நித்ய சூரிகள் பரமபதத்தை விட ஒரு படி மேலாக திருவேங்கடத்தை விரும்புவார்கள். அவர்கள் வந்து வணங்குகின்ற திருவேங்கடம் விண்ணில் இல்லை. சத்ய உலகம் போன்ற வேறு உலகங்களில் இல்லை. மனிதர்களா கிய நாம் இருக்கக்கூடிய பூமியிலே இருக்கிறது என் பது சிறப்பு. அதனால் என் கார்வண்ணன் எமக்காகவே திருமலையில் வந்து எழுந்தருளி இருப்பவன் என்கிறார்.

நித்ய சூரிகள் எம்பெருமானைத் தேடி திருவேங்கட மலைக்கு வருகின்றார்கள். ஆனால் நமக்காக பரமபதத்தை விட்டு விட்டு, அர்ச்சாவதாரம் எடுத்து, இந்த பூலோகத்திற்கு வந்தான் என்பதை திருமங்கையாழ்வார் இந்தப் பாசுரத்தில் தெரிவிக் கின்றார். சகல வேதங்களும், அந்த வேதத்தின் பொரு ளாக, அவனைப் போற்றுகின்றன. எம்பெருமானை யார் அறிந்தார்களோ, அவர்கள் வேதியர்கள். பிரம்மத்தை அறிந்தவர்கள் பிராமணர்கள்.

அப்படியானால் வேதத்தின் பிரதிபாத்தியனாய், வேதத்தின் பொருளாய், வேதத்தின் சாரமாய், வேதத் தின் சுவையாய் பயனாய் அவன் விளங்குவதால் அவனை "வேதியன்" என்கின்ற சொல்லால் திருமங்கை ஆழ்வார் குறிப்பிடுகின்றார். அர்ச்சா அவதார எம்பெருமானை பல இடங்களில் அவர் இந்தச் சொல்லால் அழைக்கின்றார்.


திருவல்லிக்கேணி இரண்டாவது பாசுரத்திலும் **"வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை"** என்று குறிப்பிடுவதை இங்கே மனதில் கொள்ள வேண்டும்.

இங்கே இரும்புச் சங்கிலியால் கட்டினாலும், பொன் சங்கிலியால் கட்டினாலும் ஒன்றுதான். இந்த இரண்டு சங்கிலிகளிலிருந்தும் இந்த ஆன்மாவை விடுவிக்கக் கூடியவன் திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஒருவனே. அந்த அலர்மேல் மங்கை நாயகனிடம் சரணடையச் சொன்ன திருமங்கை மன்னனின் இந்தப் பாசுரம் ஒன்று போதும், நம்முடைய பாவங்களை நீக்கிக் கொள்வதற்கு...

காரணம் அவன், திருவேங்கடநாதன். இவரோ திருமங்கை ஆழ்வார்.

*பாசுரம் அறிவோம்...*

## ஒரே க்ளிக்கில் தரிசனம் டிக்கெட்




**திருவேங்கடமுடையானின் பக்தர்களுக்கு டிஜிட்டல் வடிவில் TTDEVASTHANAMS என்கிற மொபைல் செயலியை தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் அண்மையில் அறிமுகப்படுத்தினார். இந்த செயலியில் நவீனப்படுத்தப்பட்ட அதிக அப்ளிகேஷன்கள் இணைக்கப்பட்டு உள்ளன. இந்த மொபைல் செயலியின் வாயிலாக பக்தர்கள் திருமலை ஸ்ரீவாரி தரிசனம், சர்வ தரிசனம், சேவைகள், அங்கபிரதக்ஷிணம், ஸ்ரீவாரி சேவை, தங்குமிடம் போன்ற வற்றை முன்பதிவு செய்யலாம். நன்கொடைகள் செலுத்திட லாம். புஷ் நோட்டிபிகேஷன் மூலம் திருமலை ஆலயத்தில் நடைபெறும் உற்சவ விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். மேலும், எஸ்.வி.பி.சி. ஒளிபரப்புகளான நேரடி ஒளிபரப்புகளையும் காண இயலும். கணினி பயன்படுத்தத் தெரியாதவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மொபைல் செயலியால் கையடக்க கைபேசியின் வழியாக திருவேங்கடமுடையானை கண நேரத்தில் காணும் பாக்கியத்தைப் பெறலாம்.**




**புராண வரலாறு :**

அ) எம்பெருமான் கிருதயுகத்தில், பிரமனுக்கு அருளும் பொருட்டு, அருள் வரதராகவும், திரேதா யுகத்தில் தொழும் காதல் களிறு என்று கஜேந்திர னுக்கு அருளுபவராகவும், துவாபர யுகத்தில் தேவர் குருவாகிய பிரகஸ்பதிக்கு அருளியும், கலியுகத்தில் ஆதிசேடனுக்கு அருளும் முறையிலும் விளங்கு கிறான் என்று புராணங்கள் சொல்கின்றன.

பகவான் நான்முகனைப் படைத்து, மறைகளை உபதேசித்து, எல்லா உலகங்களையும் ஆளக்கூடிய பெரும் பதவியைக் கொடுத்து அருளினான். ஆனால் பிறப்பு, கல்வி, புகழ் ஆகியவற்றால் கர்வம் கொண்ட பிரம்மா தன் முயற்சியினாலேயே எம்பெருமானை நேரில் காணமுடியும் என்று நினைத்தான். ஆனால் எம்பெருமானைச் சிறிதும் காண முடியவில்லை.

கர்வம் குறைந்தது. இவ்வுலகுக்கு வந்து பாரத நாட்டில் தன் விருப்பம் நிறைவேறும் என்று நினைத்து இங்கு வந்து எம்பெருமானை நேரில் காணமுடியாத பெருந்துயரத்தால் "மனம் உருகி அழத் தொடங்கினான். எம்பெருமானின் கருணை, ஓர் அசரீரி வாக்காக வெளிப்பட்டு, பிரமனுக்கு உள்ளத் தூய்மை ஏற்பட வேண்டுமானால், ஆயிரம் அசுவ மேத வேள்வியை ஒரு முறை சத்தியவிரத க்ஷேத்ரம் என்ற காஞ்சியில் முறைப்படி செய்தால், அது ஆயிரம் முறை செய்த பலனைக் கொடுக்கும் என்றும் கூறி யது. அதனைக் கேட்ட பிரம்மன், காஞ்சி மாநகருக்கு வந்து தேவசிற்பியாகிய விஸ்வகர்மாவிற்கு ஆணை இட்டு, யாகத்தைச் செய்வதற்கு ஏற்ற வகையில், ஒரு மாபெரும் நகரமாக அமைத்து மகத்தான யாகத்தை, மனைவியாகிய சரஸ்வதி உடன் இல்லாமல் செய்ய வேண்டாம் எனக் கருதி, தன்னிடம் ஊடல் கொண்டு பிரிந்து வாழ்ந்த கலை மகளை, யாகத்துக்கு வரு மாறு, தன் மகனான வசிஷ்டரை அனுப்பி அழைத் தான்.

அவள் வருவதற்கு மறுத்ததோடு, அந்த யாகத்தை, எத்தனை வழிகளில் தடுக்க முடியுமோ, அத்தனை வழிகளில் எல்லாம் தடுக்க செயலாற்றத் தொடங்கினாள். அவள் முயற்சியை முறியடிக்கும் முறையில், பகவான் பிரம்மாவுக்கு அருளினான். அசுரர்களும், தேவர்களும் பெருமை தரும் இந்த வேள்வியைத் தடுக்க எண்ணி, சரஸ்வதியிடம் கோள் மூட்டினர். அவள், "வேகவதீ" என்ற பெயரில் மிகுந்த வேகத்தோடு யாகசாலை உள்ள இடத்தை அழிப்பதற்காக நதியாகப் பெருகி வந்தாள். பிரம்மா, பகவானைச் சரண் அடைய, எம்பெருமான், இங்கு அர்ச்சா அவதாரத்தில் தானே அணையாய்க் கிடந்து அருளி, வேகவதியை அடக்கியதால், வேகஸேது" ஆனான். வேள்விமுற்றுப் பெற்றது. அனைத்து




தேவர்களின் ஹவிர்பாகத்தையும் எம்பெருமான் ஒருவனே பெற்றார். யாகத்தின் நிறைவான நிகழ்ச்சியாக "லபா ஹோமம்" நடைபெற்றவுடன், எம்பெருமான் தோன்றி, "யாது வரம் வேண்டும்?" என்று கேட்ட போது, இத்தலத்தில் நிலையாய், இதே பேரழகுக் கோலத்துடன் எழுந்தருளி அருள் பாலிக்க வேண்டும் என்று வேண்டவே அதற்கு இசைந்து, அனைவருக்கும் வரம் அளிக்கும் வள்ளலாய் எழுந்தருளினான்.

ஆ) திரேதாயுகத்தில், கஜேந்திரன் என்ற யானைக்கு, வரதன் அருளினான். மஹாசாந்தர் என்ற மாமுனிவர் திரிகூட மலையில் கடுந்தவம் செய்தபோது, இந்திரன் பல்வகை முயற்சிகளைச் செய்து அதனைத் தடுக்கவும், எல்லா முயற்சிகளும் தோற்றன. இறுதியில் தானே ஓர் ஆண் யானையாக உருக்கொண்டு பல பெண்யானைகளுடன் முனிவரின் தவத்துக்கு இடையூறு செய்யவும், முனிவர் தவம் கலைந்து, தாமே ஓர் ஆண் யானையாக மாறினார்.

முனிவராகிய யானை, சாளக்கிராமம் என்னும் இடத்தில், புனித தீர்த்தத்தில் தற்செயலாக மூழ்கியபோது, பழைய நினைவுகள் தோன்றி, பக்தி உண்டாகி, மலர்களால் எம்பெருமானை பூஜை செய்வதற்கு கோதாவரிக் கரையில் மிருகண்டு முனிவரின் அறிவுரைப்படி இங்கு வந்து 14000 மலர்களைக் கொண்டு வழிபட எண்ணி மலர்களைத் தேடிச்சென்ற போது, ஒரு பொய்கையில் முதலையால் பிடிக்கப்பட்டு பகவானை அழைக்க, எம்பெருமான் கருட வாகனனாய், அந்த யானைக்குக் காட்சி கொடுத்து, அது அளித்த மலர்களை எல்லாம் ஏற்று, யானைக்கு முக்தி வழங்கினான்.

இ) துவாபர யுகத்தில் தேவ குருவாகிய பிரகஸ்பதிக்கு வரதன் அருளினான். தேவர் உலகத்தில், இல்லறம் சிறந்ததா? அல்லது துறவறத்தில் தீர்த்த யாத்திரை சிறந்ததா? என்கிற விவாதம் எழ, பிரகஸ்பதி தீர்த்த யாத்திரை சிறந்தது என்று கூற, இந்திரனும் மற்ற தேவர்களும் பிரகஸ்பதியை சபிக்க, அவர் ஏழை அந்தணனாகப் பிறந்து, அழகற்ற மனைவியுடன் வாழ்ந்து, எண்ணற்ற குழந்தைகளைப் பெற்று பொருள் அற்ற வறுமையில் வாழ்ந்து, அப்போது அடைக்கலம் என்று வந்த ஒரு நாயை விரட்டவே, அதன் சாபத்தால் நாயாகப் பிறக்கும் நிலை. பின்பு பரத்துவாஜ ரிஷியின் கிருபையால் பேரருளாளனை சேவித்து நீண்ட காலம் வழிபட்டு நற்கதி அடைந்தார்.

ஈ) கலியுகத்தில் வராகவதாரத் திருக்கோலத்தைக் காண விரும்பிய ஆதி சேடன், பூமியைப் பிளந்து கொண்டு, காஞ்சி நகர் வந்ததாகவும், அப்போது அவன் கிளம்பி வந்த இடம் தற்போது அனந்தசரஸ் என்ற பெயரில் உள்ளதாகவும் கூறுவர். இந்தப் பொய்கையில்தான் அத்தி மரத்தில் திருமேனி கொண்ட வரதர் எழுந்தருளி உள்ளார். 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியில் வந்து, சில நாட்கள் இந்தப் பொய்கையிலே பள்ளி கொள்கிறார்.

உ) சாபத்தால் பல்லியாக மாறிய இருவருக்கு வரதன் அருளினார். கௌதம முனிவரின் சீடராகிய ஹேமன், சுக்லன் என்ற இருவர் தமது ஆசார்யரின் பூஜைக்காக வைத்திருந்த புனித நீரில் பல்லி விழுந்ததைக் கவனிக்காததால் கௌதமர் சீற்றம் கொண்டு அவர்களை பல்லிகளாகப் பிறவி எடுக்குமாறு

சபித்தார். பிழையைப் பொறுத்து அருளுமாறு அவர்கள் வேண்டியபோது அவர்களை இங்கு வந்து, இந்திரன் வரதனை வழிபட வரும் போது, அவர்கள் சாபம் நீங்கும் என்று கூறியதால், அவர்கள் இங்கு வந்து வரதன் சந்நிதியில் இந்திரன் வந்தபோது பல்லிவடிவம் நீங்கி மனித வடிவில் விளங்கவும் எம்பெருமான், அவர்கள் பக்திக்கு இரங்கித் தம்மை வணங்கியபின், இரண்டு பல்லிகளையும் தொடுபவர்களுக்கு, அனைத்து நோய்களும் துன்பங்களும் நீங்கும் என்று அருளினார்.

**சிறப்புகள் :**

ஸ்ரீவைஷ்ணவர்களின் ததீயாராதனத்திற்காக அரசனின் செல்வத்தை திருமங்கையாழ்வார் செல விட்டு, சோழனின் சீற்றத்திற்கு ஆளாகி, மன்னனால் சிறைப்பிடிக்கப்பட்ட போது, கச்சிநகர் எம்பெருமான் ஒருவரே, அவருக்குக் கனவில் செல்வம் இருக்கும் வேகவதியாற்றைக் காட்டிக் கொடுத்து, ஆழ்வாரை விடுதலை செய்யுமாறு செய்தார். பொய்கையாழ்வார் அவதரித்த இடம் இது. திருமழிசையாழ்வார் பல்லாண்டுகள் இங்கு வாழ்ந்தருளி, திருவெஃகா என்ற தலத்து எம்பெருமானுக்குச் "சொன்ன வண்ணம் செய்த பெருமாள்" என்ற சிறப்புப் பெயர் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த திருப்பதி.

காஞ்சியில் யாதவப்பிரகாசர் என்ற ஆசார்ய னின் சிஷ்யரான இராமாநுஜர் ஆசாரியனையே விஞ்சும் அறிவுடன் இருந்ததால் அவரை கங்கையில் வீழ்த்திக் கொன்று விட யாதவப் பிரகாசர் முயலவும், அவரிடம் இருந்து, நம் இராமாநுஜரைக் காப்பாற்றி யவர் அத்திகிரிவரதர். விந்தியமலைக் காட்டில் வரதனும் பெருந்தேவித் தாயாரும், வேடனும் வேடுவப்பெண்ணாகவும் உருமாறி, சாலைக் கிணற்றி லிருந்து இராமாநுஜர் கொணர்ந்த நீரைப் பருகிக் காஞ்சியில் தொண்டு புரிய வைத்தனர்.

ஸ்ரீவைணவ ஆசாரியராகிய ஆளவந்தாருக்கு "ஆம் முதல்வன் இவன்" என்று இராமாநுஜரை அடையாளம் காணச் செய்தவர். இந்த வரதனே! திருக்கச்சி நம்பிகள் என்கிற ஆசார்யருடன் அவர் ஆலவட்ட கைங்கர்யம் செய்யும் போது அவரிடம் பேசியவர். அவர் மூலமாக இராமாநுஜர் தனது உள்ளத்தில் கொண்டிருந்த ஐயங்களை எல்லாம் நீக்கும் முறையில், ஆறு வார்த்தைகளைக் கூறி நெறிப்படுத்தியவர், வரதர். இராமாநுஜரை அரங்க நகர்ச் செல்வனுக்கு அனுப்பியவர். இராமாநுஜரின் முக்கிய சீடரான கூரத்தாழ்வானை "வரதராஜ ஸ்தவம்" என்ற நூலைப் பாடுமாறு செய்து, சோழ மன்னனின் கொடுமையால், விழி இழந்த அவருக்கு மீண்டும் பார்வையைக் கொடுத்தவன் தேவப் பெருமாள். காஞ்சி வரதனிடம் எல்லை இல்லா ஈடுபாடு கொண்ட தொட்டாச்சாரியார் என்ற மகானுக்கு, அவரது முதுமையில் அவர் இருக்கும் சோளசிங்கபுரத்திலேயே தனது கருட வாகன சேவையைக் காட்டி அருளியவர்.

தூப்புல் பிள்ளை என்றும், வேதாந்தாச்சாரியார் என்றும், "கவிதார்க்கிக சிம்மம்" என்றும், "சர்வதந்திர ஸ்வதந்த்ரர்" என்றும் போற்றப்பெறும் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் இத்தலத்தில் அவதரித்து, வட மொழியிலும் தமிழிலும் பல நூல்களை அருளி "வரதனைக் கண்டு மகிழும் பேரின்ப அனுபவத்திற்கு, வைகுந்த அனுபவமும் ஈடில்லை என்று கூறிக் காஞ்சி வரதனை, "அத்திகிரியில் தன் பாட்டனின் சொத்தா கிய பெரும் செல்வமாகக் கூறுவாராய்" *"அஸ்திமே ஹஸ்தி சைலாக்ரே வஸ்து பைதா மஹம் தநம்"* என்று கூறினார். ஸ்ரீமணவாள மாமுனிகள், "தேவராஜ மங்களம்" ஸ்தோத்திர நூலை அருளியுள்ளார்.

முகலாயப் படையெடுப்பின் போது, வரதனின் உத்ஸவ மூர்த்தியை பக்தர்கள் உடையார் பாளை யத்தில் வைத்துப் பாதுகாத்தனர். பிறகு இடர்கள் நீங்கியதும் காஞ்சிக்கு எழுந்தருளச் செய்தவர் ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜ காசார்ய ஆத்தான் ஜீயர் என்பவரே. அப்பய்ய தீக்ஷிதர், வேங்கடாத்வரீ, தியாகப்ரம்மம் முதலானோரும் இப்பெருமான் மீது பக்தி கொண்டு பாக்கள் இயற்றியுள்ளனர்.

ராபர்ட் கிளைவ் என்பவர் இப்பெருமானின் அழகில் ஈடுபட்டு தன் மனைவியின் மகர கண்டி கையைக் காணிக்கையாக அளித்தார். விஜய நகர அரசின் ஆஸ்தான பண்டிதர் ஸ்ரீதாத தேசிகன் இத் திவ்ய தேசத்தில் கணக்கற்ற பணிகளை ஆற்றி யுள்ளார். ஸ்ரீவைணவ சம்பிரதாயத்திற்குத் தனது எழுத்தாலும் பேச்சாலும் அளவற்ற தொண்டுகள் செய்து ஸ்ரீவைணவப் பல்கலைக் கழகமாய் விளங்கிய பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீஉ.வே. அண்ணங்கராசார்யர் இவ்வூரில் தோன்றியவர்.

*திருக்கச்சி திவ்யதேச வைபவம் வளரும்...*



# ஆதிசங்கர பகவத் பாதாள்

-திருமதி மைதிலி சம்பத்,
செகந்திராபாத்,
81256 16876.

நம்முடைய பாரததேசத்தில் ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில் அனைவரும் பின்பற்றும் சனாதன தர்மத்தில் சற்றே தொய்வு ஏற்பட்டது. அவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்றி, நம் சனாதன தர்மத்தை நிலை நாட்டவே ஸ்ரீஆதிசங்கரர், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீமத்வாச்சாரியார் ஆகியோர் அடுத்தடுத்து அவதரித்தார்கள். அவர்களில் ஆதிசங்கரருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சில சுவையான சம்பவங்களைப் பார்ப்போம்.


கேரள மாநிலத்தில் காலடியில் சிவகுரு ஆரியாம்பாள் தம்பதிக்கு மகப்பேறு இல்லை. ஆகையால், அவர்கள் சிவனிடம் மனம் உருகிப் பிரார்த்தித்தார்கள். அவர்களிடம் சிவபெருமான் தானே அவர்களுக்கு மகனாக வந்து பிறக்கிறேன் என்று சொன்னார். குழந்தையாக இருக்கும்பொழுது தந்தையை இழந்த சங்கரனுக்கு தாயார் மூன்று வயதிலிருந்து கல்வி கற்பித்தார்.ஐந்தாம் வயதில் உபநயன சம்ஸ்காரமும் செய்வித்தார். உடனே அக்கால வழக்கப்படி குருகுலம் செல்லவும் வேண்டி இருந்தது. ஒரு நாள் அதே வீதியில் இருக்கும் ஒரு பெண்மணி வீட்டில் பிக்ஷைக்கு போன போது அவளிடம் எதுவும் இல்லாததால் ஒரு நெல்லிக்காயை அவருடைய பாத்திரத்தில் இட்டார். அப்பெண்மணியின் வறுமை நிலையை உணர்ந்து கொண்ட சங்கரர் அப்போதே கனகதாரா ஸ்தோத்திரத்தை அருளினார். உடனே மஹாலக்ஷ்மி மனம் மகிழ்ந்து அந்தப் பெண்ணின் வீட்டில் தங்க நெல்லிக் கனிகளாகப் பொழிந்தாள்.

ஆபத்சந்நியாசம் மேற்கொண்ட சங்கரர் முறைப்படி சந்நியாசம் பெறுவதற்காக குருவைத் தேடிப் புறப்பட்டார். நர்மதை நதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்த குரு கோவிந்த பகவத் பாதரை தேடிக்கொண்டு செல்லும் போது வழியில் கடும் வெயிலில் ஒரு நிறைமாத கர்ப்பிணியான பெண் தவளை ஒன்றுக்கு ஒரு பாம்பு தன்னுடைய படத்தை விரித்து நிழல் அளித்துக் கொண்டிருந்தது. சங்கரருக்கு ஆச்சரியம் தாளவில்லை. “இப்படி இருக்கிறதே.

காரணம் என்னவாக இருக்கும்? இங்கே ஏதேனும் பெரிய முனிவர் தவம் செய்கிறாரா?” என்று அருகில் உள்ளவர்களை விசாரித்தபோது “ரிஷ்ய ச்ருங்கர் தவம் செய்த இடம் இது” என்று அவர்கள் சொன்னார்கள். அவர் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் செய்த தவத்தின் பலன் இன்னும் இங்கு இருக்கிறது என்றால், பிற்காலத்தில் இந்த இடத்தில் நாம் ஒரு மடத்தை நிறுவ வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். அப்படி தோன்றியதுதான் சிருங்கேரி மடம்.



ஒருநாள் சங்கரர் பூரணாநதியில் குளித்துக் கொண்டிருந்தபோது இவருடைய காலை ஒரு முதலை வந்து கவ்வியது. "ஐயோ! காப்பாற்றுங்கள்" என்று அவரின் தாயார் கதறத் தொடங்க, அப்போது "அம்மா! நீயே என்னைக் காப்பாற்றலாம். இப்பொழுது இந்த முதலை என்னை விழுங்கி விட்டால் என் ஒரு பிறவி முடிந்து விடும். அதற்கு பதிலாக நான் சந்நியாசம் ஏற்றுக் கொண்டாலும் இந்தப் பிறவி முடிந்து அடுத்த பிறவி தொடங்கி விடுகிறது. எனவே எனக்கு ஆபத் சன்யாசம் ஏற்றுக் கொள்ள தயவு செய்து அனுமதி கொடுங்கள்" என்று கேட்டார். பிள்ளை உயிருடன் இருந்தால் போதும் என்று எண்ணி ஆரியாம்பாள் அதற்குச் சம்ம திக்க, சங்கரரும் சன்னியாசி ஆகிவிட்டார். ஆனால், அவருடைய அம்மாவிற்கு அவர் "உன்னுடைய கடைசி காலத்தில் நான் வந்து உன்னுடைய அந்திம சமஸ் காரங்களை தவறாமல் செய்வேன்" என்றும் வாக்குறுதி அளித்தார்.



ஆதிசங்கரர் நர்மதை ஆற்றங்கரையில் தன்னுடைய குருவைத் தேடிச்சென்றார். அங்கு அனைவரும் "இந்த குகை யில் ஒரு முனிவர் தவம் செய்கிறார் அவராக இருக்க லாம்'' என்று சொன்னார்கள். குகையை மூன்று முறை வலம் வந்து குருவை நோக்கி வணக்கம் செய்தார். இதுவரை வாய் திறவாத கோவிந்தபகவத் பாதர் வாய் திறந்து "நீ யார்?" என்று கேட்டார். அதற்கு பகவான் ஆதிசங்கரர் தான் கர்ம நிலையைக் கடந்து ஞான நிலையை அடைந்ததை காட்டும் விதமாக பத்து சுலோகங்களைக் கூறினார். யாரும் சொல் லாத அந்த பதிலைக் கேட்ட கோவிந்த பகவத்பாதர் இவரைத் தன்னுடைய சீடராக ஏற்றுக் கொண்டார். இந்த சுலோகங்கள் "தசா ஸ்லோகி" என்று வழங்கப் படுகிறது. மகா வாக்கியங்களை கோவிந்த பகவத் பாதர் சங்கரனுக்கு உபதேசித்தார்.

இதன் பிறகு தன்னுடைய குருவின் விருப்பத் திற்கு இணங்க சங்கரர் காசிக்குச் சென்றார். அக் காலத்தில் வேத சூத்திரங்களை படித்தவர்களுக்கு காசி புகலிடமாக இருந்தது. பிரம்ம சூத்திரத்திற்கு பாஷ்யம் எழுதும் படி தன்னுடைய குருநாதர் சொன்னதைச் செய்வ தற்காகவே அவர் முக்கியமாக அங்கு சென்றார். ஆயினும் அவர் தினமும் மாலையில் நிகழ்த்தும் உபந்யாசங்களைக் கேட்டுப் பலரும் அத்வைதிக ளாகினர். தங்கள் ஊருக்குச் சென்று அங்குள்ளவர் களுக்கும் இந்த கொள்கையைப் பரப்பி அத்வைதி களாக ஆக்கினார்கள். இங்கே வசிக்கின்ற கால கட்டத்தில்தான் ஸ்ரீபாதராயனர் எழுதிய பிரம்ம சூத்திரம், 10 உபநிடதங்கள், கண்ணன் அருளிய கீதை ஆகியவற்றுக்கு இவர் "பிரதான்யம்" என்று வழங்கப்படும் மூன்று நூல்களையும் எழுதினார்.

நாட்டின் பிற இடங்களுக்கும் சென்று அத் வைதக் கொள்கையை நிலை நாட்ட வேண்டும் என்று எண்ணம் கொண்டார். அதற்கு முக்கியமாக குமரில பட்டரைச் சந்திக்க வேண்டும். இந்தக் கோட்பாட்டை பலரும் பின் பற்றுகிறார்கள்.



ஒரு நாள் கங்கையில் நீராடி காசியின் குறுகலான சந்தில் தன்னுடைய சீடர்களுடன் விஸ்வ நாதர் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது, நான்கு நாய்களுடனும் ஒரு புலையன் எதிர்ப்பட்டான். உடனே ஆதிசங்கரரின் சீடர்கள் "போ! விலகிப் போ" என்று சொன்னார்கள். எதை விலகிப் போகச் சொல் கிறீர்கள்? என்னுடைய உடலையா, உடலுக்குள் இருக்கும் ஆத்மா வையா, என்னுடைய ஆத்மாவும் உங்களுடைய ஆத்மாவும் ஒன்று என்பது தானே அத்வைதம்? அவ்வாறு இருக்க, நீங்கள் எதனால் இப்படி சொல்கிறீர்கள்? என்று அந்த மனிதன் கேட்கவும், சங்கரர் அவனுடைய காலில் விழுந்து பணிந்து விட்டார். உடனே "மனிஷா பஞ்சகம்" என்ற ஐந்து பாடல்களில் இந்த நிகழ்வை அவர் பதிந்து உள்ளார். புலையனுக்கும் அந்தணனுக்கும் வேறுபாடு கிடையாது என்பதை இந்தப் பாடல்கள் விளக்குகின்றன.

இது தவிர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் இவர் சொல்லும் பொழுதே ஆதி சங்கரருக்கு ஒரு செய்தி கிடைத்தது. குமரில பட்டர் துஷாக்னி பிரவேசம் செய்ய இருக்கிறார் என்பதே அச்செய்தி. "துஷ்யம்" என்றால் தவிடு. இந்தத் தவிடால் தன் உடல் முழுவதும் மூடிக் கொண்டு தாம் உள்ளே இருந்து தீயிட்டுக் கொண்டு சிறுகச் சிறுக உயிரை விடுவது தான் துஷாக்கினி பிரவேசம்.

குமரில பட்டர் அப்படி என்ன தவறு செய்தார் என்றால் அவர் பௌத்த மதத்தினரை சந்தித்து, அவர்களோடு தன்னையும் பௌத்த இனத்தவரா கவே காட்டிக்கொண்டு அவர்களுடைய உண்மை யான கோட்பாடுகளை அறிந்து கொண்டார். இதற்கு காரணம் அவர்களிடம் பூர்வ மீமாம்ஸக் கொள்கை களைப் பரப்பி அவர்களுடைய கோட்பாட்டை வெல்ல வேண்டும் என்பதுதான். திடீரென ஒரு நாள் அவருக்கு "ஐயோ! தவறு செய்து விட்டோம். இதுபோல் பொய் சொல்லி வஞ்சனையாக அவர்களிடம் கற்று, அவர்களுடைய சாஸ்திர கொள் கைகளை மறுத்து ஒழிப்பது என்பது மிகப் பெரிய தவறு" என்று தோன்றி விட்டது. இந்த மாதிரி குற்றங் களுக்கு துஷாக்னிப் பிரயோகமே தண்டனை என்று தெரிந்தவராய் அதை தான் மேற்கொண்டார்.

ஆதி சங்கரர் சொல்லியும் அதிலிருந்து வெளியே வர வில்லை. தன்னுடைய சீடரான மண்டன மிஸ்ரரை சந்தித்து அவரிடம் வாதம் புரிந்து அவரை அத்வைத கொள்கைக்கு மாறும் படி சொன்னார். அவரை சந்திப்பதற்காகப் புறப்பட்டார் ஆதிசங்கரர். கடும் வாதங்களுக்குப் பிறகு ஆதிசங்கரர் முன் தான் தோற்றதை ஒப்புக்கொண்டார். இவர்களுக்கு நடுவராக இருந்தது மண்டன மிஸ்ரரின் மனைவி சரசவாணி. அவள் தன் கணவர் துறவியாகி தன்னை விட்டுப் பிரிவதை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்தாள். கடைசியில் "என்னையும் வென்றால்தான் நீங்கள் முழுமையான வெற்றி பெற்றதாக கருத முடியும்" என்றாள். ஆதிசங்கரர் ஒப்புக்கொண்டார்.

எட்டு வயதிலேயே துறவறம் மேற்கொண்டவர் சங்கரர். ஆதலால், அவருக்கு ஆண் பெண் உறவு பற்றி எல்லாம் ஏதும் தெரிந்திருக்க நியாயம் இல்லை என்றெண்ணி சரசவாணி அவை பற்றிய சில கேள்வி களை எழுப்பவும், சங்கரர் தனக்கு கொஞ்ச காலம் அவகாசம் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டார். அந்த கணமே அங்கிருந்து புறப்பட்டுத் தன் சிஷ்யனு டன் ஒரு நாட்டைக் கடக்கும்போது அந்நாட்டு மன்னன் அமருகன் என்பவன் இறந்து விட்டதாக தெரிந்தது. உடனே தான் கூடுவிட்டு கூடு பாய்ந்து, அதாவது அந்த உடலில் தான் புகுந்து அவன் மனைவியரின் வாயிலாக அந்தப் பெண்களுடைய மனநிலையை அறிந்து, சரசவாணியின் கேள்வி களுக்குச் சரியாக பதில் சொல்லி அவளை வென்றார். இதற்குப் பிறகு மண்டன மிஸ்ரர் துறவறம் ஏற்று சுரேஷ்வரர் என்ற பெயரைப் பெற்றார்.

தொடரும்...

## பரசுராம அவதாரம்



மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில், முதல் ஐந்து அவதாரங்கள் யாவும், அவை கொண்ட வடிவால் (மீன், ஆமை, பன்றி, நரசிம்மம், வாமனன்) பெயர் பெற்றவையாய் இருக்க, பரசுராம அவதாரமோ, தன் கையில் ஏந்திய ஆயுதத்தால் (பரசு–கோடாரி) பெயர் பெற்றது எனலாம். பரசுராமர் அவதாரம் என்பது திருமாலின் ஆறாவது அவதாரமாகும். இந்த அவதாரம் பாரதத்தில், தற்போதைய கேரள மாநிலத்தில் தோன்றியபடியால், இன்றும் கேரள மாநிலம் "பரசுராம க்ஷேத்ரம்" என்றே போற்றியழைக்கப்படுகிறது.

ஸப்த ரிஷிகளுள் ஒருவரான ஜமதக்னி முனிவருக்கும் அவரின் மனைவியான ரேணுகா தேவியின் கடைப் பிள்ளையாக அந்தணர் குலத்தில் திருமாலின் அம்சமாக அவதரித்தவர் பரசுராமர். இவர் அந்தண குலத்தில் தோன்றினாலும், ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, குறிப்பாக "கோடாரி" என்னும் ஆயுதத்தைத் தன்னிடம் காப்பாகக் கொண்டதால், "பரசு ராமன்" எனும் பெயருடன் விளங்கினார். சிவதவம் புரிந்து சிவனிடமிருந்து கோடரியும், மற்றைய ஆயுதங்களையும் வரமாகப் பெற்றார்.

## ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# திருமாலையாண்டான்



-ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972



வாழித்திருநாமம்

*அம்புவியில் ஆளவந்தார் அடிஇணையோன் வாழியே*
*ஆரியனாம் அவர் பதத்தை அன்பு செய்தோன் வாழியே*
*வெம்பிவரும் வாதியரை வேர் களைந்தோன் வாழியே*
*மேதினியில் நாலூர் விளங்கவந்தோன் வாழியே*
*எம்பெருமான் எதிராசற்கு ஈடு உரைத்தான் வாழியே*
*ஏற்றமுள்ள மாசி மகம் இலங்க வந்தோன் வாழியே*
*வம்பவிழும் சோலைமலை வாழவந்தோன் வாழியே*
*மாலாதராரியன்தாள் மாநிலத்தில் வாழியே*

திருக்கோட்டியூர் நம்பி அவதரித்த வருடத்திற்கு அடுத்த வருடமான ஸர்வதாரி வருடம், மாசி மாதம், மக நக்ஷத்திரத்தில், திருமாலிருஞ்சோலையில் ஞான பக்தி வைராக்யச் செல்வம் மிக்கவரான திருமாலை ஆண்டான் என்னும் ஆசார்யர் அவதரித்தார். ஸ்ரீவாமநர் என்னும் நித்ய ஸூரியின் அம்சமாக பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ பிராம்மண குலத்தில் அவதரித்தவர். இவரது திருநாமம் ஜ்ஞான பூர்ணர். நல்லறிவு நிறைந்தவர் என்றபடி. திருமாலையாண்டான் என்பது இவர்களுக்கு வம்சபரம்பரையாக வந்த பட்டப்பெயர் ஆகும்.

### பதவுரை

அம்புவியில் – அழகிய இந்த பூமியில், ஆளவந்தார் – தமது ஆசார்யரான ஆளவந்தார், அடி இணையோன் – திருவடியாகத் திகழ்பவர், வாழியே – வாழ வேண்டும். ஆரியனாம் – ஆசார்யரான, அவர் – ஆளவந்தார், பதத்தை – ஆளவந்தார் திருவடியில், அன்பு செய்தோன் – பக்தி வைத்தவர். வெம்பி வரும் – மனம் புழுங்கி வரும். வாதியரை – தருக்கம் பேசுபவர்களின், வேர்களைந்தோன் – கோபத்தைப் போக்கினவர். மேதினியில் – பூமியில், நாலூர் விளங்க வந்தவர், எம்பெருமான் எதிராசற்கு – எம்பெருமானான எதிராசருக்கு, ஈடு உரைத்தான் – திருவாய்மொழிப் பொருளை உபதேசித்தவர். ஏற்றமுள்ள – பெருமை பெற்ற, மாசி மகம் –மாசி மாதம் மக நக்ஷத்ரத்தை, இலங்க வந்தோன் – விளங்க வந்தவர். வம்பவிழும் – மணம் நிறைந்த, சோலைமலை – திருமாலிருஞ்சோலை மலை, வாழ வந்தோன் – வாழச் செய்தவர். மாலாதர ஆரியன்தாள் – திருமாலை ஆண்டான் திருவடிகள், மாநிலத்தில் – இந்த பெரிய பூமியில், வாழியே – வாழ வேண்டும்.

### சிறப்புரை

(அம்புவியில் ஆளவந்தார் அடிஇணையோன் வாழியே) அம்புவி – அழகிய பூமி. இந்த பூமிக்கு அழகாவது ஆழ்வார் ஆசார்யர்கள், முக்கியமாக திருமாலையாண்டான் என்னும் ஆசார்யர் பிறந்ததேயாகும். ஆளவந்தாருடைய முக்கியமான இருபத்திரண்டு சீடர்களில் இவர் முதன்மையானவர். *“பக்தாம்ருதம் வாஞ்சித பாரிஜாதம் மாலாதரம் யாமுநபாதம் பக்தம்”* என்கிறபடியே பக்தர்களுக்கு அமுதம் போன்றவராய், கேட்பவர்களுக்குக் கேட்டதைக் கொடுக்கும் கற்பக வ்ருக்ஷமாயிருக்கும் யாமுநாசார்யரான ஆளவந்தார் திருவடியில் அன்பு கொண்டவர் என்று இவரது தனியனில் அருளியது காண்க. அப்படிப்பட்ட ஆளவந்தார்

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.7 பிப்ரவரி 2023 விடைகள்

1. திருமால்.
2. வெள்ள மச்சேரி.
3. கேரளா.
4. திருமழிசையாழ்வார்.
5. குமரகுருபரர்.
6. பீஷ்மர்.
7. அர்ஜுனன்.
8. பெரியாழ்வார்.
9. திருமலையப்பன்.
10. புதன்.
11. அஸ்வத்தாமன்.
12. விஷ்ணு.
13. மாணிக்கவாசகர்.
14. வாமன விமானம்.
15. ஆடி, புஷ்யம்.




**போட்டி எண்.7ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி பா.எ. லோகப்ரியா, சிங்கபெருமாள் கோவில், செங்கல்பட்டு மாவட்டம்.
2. செல்வி பா. சம்ருதா, ராகவன் பேட்டை, விழுப்புரம் மாவட்டம்.
3. செல்வன் சாய். ஸ்ரீநிவாசன், மாடம்பாக்கம், சென்னை.

திருவடிகளில் எப்போதும் அடிபணிந்து நம் தர்சன அர்த்தங்களைக் கேட்டவராகையாலே "அடி இணையோன்" எனப்பட்டது.

(ஆரியனாம் அவர் பதத்தை அன்பு செய்தோன்) ஆரியன் – வித்வான், பூஜிக்கத்தக்கவர் என்று பல பொருள். இப்படி வித்வானாய் பூஜிக்கத்தக்கவர் ஆளவந்தார். பதம் – "கம்யதே முமுக்ஷுபி: இதி பதம்" என்பதற்கு ஏற்ப மோக்ஷத்தில் இச்சையுடையோர்க்கு வழியாக – உபாயமாக இருப்பவர். அவர் பதம் – ஆளவந்தார் வழியை என்றபடி. ஆளவந்தாரிடம் அன்பு செய்தலாவது திருக்கோட்டியூர் நம்பி நியமனத்தால் இராமாநுஜருக்கு திருவாய் மொழியின் பொருள்களைச் சொல்லும் போது "ஆளவந்தார் அருளிச் செய்யும்படி" என்று *1–2, 1–1–1, 1–4–1, 1–5–11, 2–3–1, 2–3–3, 2–5–1, 2–7–5, 2–10, 5–1–9, 5–10–4, 6–1–1, 8–7–3, 9–9–1,* முதலான பல திருவாய்மொழி பாசுர வ்யாக்யானத்தில் நிர்வகிப்பது காணலாம். அதனால் ஆண்டானுக்கு ஆளவந்தாரிடம் அன்பின் மிகுதி சொல்லப்பட்டது. இது பற்றியே "அன்பு செய்தோன்" என்றபடி.

(வெம்பிவரும் வாதியரை வேர்களைந்தோன்) வெம்பி வருவதாவது மனம் புழுங்கி வருதல். ஆண்டானுடைய முன்னோர்களில் ஒருவர் கண்ணுக்கு இனியான் ஸ்வாமி என்று பெயர். ஒரு சமயம் திருமாலிருஞ்சோலைக்கு வந்து அழகரைச் சேவித்து மனம் புழுங்கி, மலையாள மாந்த்ரிகர்கள் மையைக் கண்ணில் இட்டுக் கொண்டு வந்து, அதன் பெருமையாலே ஒளிந்து கொண்டு, அழகருடைய ஒளிமயமான அழகை ஆகர்ஷித்துக் கொண்டு போக எண்ணினர். அதனை அறிந்த இந்த ஸ்வாமி இந்த மாந்த்ரிகர்கள் எம்பெருமானுக்கு அளிக்கும் பலி பிரசாதத்தை உண்டு உயிர் தரிப்பார்கள் என்று அறிந்து, அந்த பிரசாதத்தில் மிளகு அதிகமாகச் சேர்க்கும்படி செய்தார். அதை உண்ட மாந்த்ரிகர்கள் கண்ணீர் நிறைந்து மை கரைந்து வெளிப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள். அதனால் அந்த கண்ணுக்கு இனியான் ஸ்வாமிக்கு திருமாலை ஆண்டான் என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது. அவரது வம்ச தொடர்பால் வாதியர்களை வென்றபடி அழகரைக் காப்பாற்றியதால் இன்றும் சித்ரா பௌர்ணமி அன்று அழகர் மதுரைக்கு எழுந்தருளும் மஹோத்ஸவத்தில் அழகருக்கு முன்னே திருமாலையாண்டான் பல்லக்கில் எழுந்தருளுவர். இது பற்றியே "ஆண்டார் பல்லக்கு முன்னே, அழகர் பல்லக்கு பின்னே" என்று சொல்லுவது மரபு.

(மேதினியில் நாலூர் விளங்க வந்தோன்) மேதிநீ – வடசொல். திருமால் மதுகைடபர்களைக் கொல்லும் போது அவர்கள் தேகத்திலிருந்த மேதஸ்ஸு – கொழுப்பு பூமியில் பட்டதன் காரணத்தால் பூமிக்கு

மேதினி என்று பெயர். ஸப்த தீபவதியான மேதிநீ என்பர் பிள்ளான் என்னும் ஆசார்யர் (திருவா.4–1–1). ஏழு தீவுகளாவன – ஜம்பு, ப்லக்ஷ, சால்மலி, குச, கேரௌஞ்ச, சாக, புஷ்கரம். இவற்றில் நாலூர் எனும் ஊர் இடவாகு பெயராதலால் அங்கு வாழ்ந்த ஆசார்யர்களைக் குறிக்கும். அவ்வூரைச் சேர்ந்தவர் ஆகையால் “வாய்த்த நாலூர்த் திருமாலை ஆண்டான்” என்றே நிர்வாகம். நாலூர் இவ்வாசாரியர் குடிப்பெயர். பிற்காலத்தில் ஆளவந்தார் சீடரான நாலூராண்டான், கூரத்தாழ்வான் சீடரான நாலூரான், நம்பிள்ளை சீடரான நாலூர்ப்பிள்ளை, நாலூராச்சான் பிள்ளை முதலான ஆசார்யர்களின் குடிப்பெயர் இதுவே ஆகும். பிற்காலத்தில் திருமாலையாண்டான் ஸாதித்த திருவாய்மொழி அர்த்த விசேஷங்களை தேக்கி வைத்து நம்பிள்ளை ஈட்டில் உபகரித்ததை வெளிக் கொணர்ந்த நாலூர்ப் பிள்ளை முதலானோர் விளங்கச் செய்ய திருமாலையாண்டான் வழி வகுத்தாராகையால் “நாலூர் விளங்க வந்தான்” என்று சொல்லத்தகும்.

வாழித்திருநாம உரை தொடரும்....

# திருமலையப்ப ஸ்வாமியின் திருலீலை

சில ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் குலதெய்வம் குவலயவல்லித்தாயார் சமேத வரதராஜப் பெருமாள் எழுந்து அருளியுள்ள சேலம் நைனா மலைக்கு நாங்கள் சென்றோம். சென்னையிலிருந்து மகன், மருமகள், பேரன் வந்திருந்தனர்.

மகன் தன் தாயின் ஆசையை நிறைவேற்ற விலை உயர்ந்த புது புகைப்படக் கருவி ஒன்றை வாங்கி, அதை மஞ்சள் பையில் போட்டு எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.

பேருந்தில் ஏறியவுடன் அமர்ந்த இருக்கைக்கு மேல் இருந்த பரணில் புகைப்படக் கருவி பையை மகன் வைத்து விட்டான். இறங்க வேண்டிய இடம் வந்ததும், பையை எடுக்காமல் எல்லோரும் இறங்கி விட்டோம். பேருந்தும் புறப்பட்டுச் சென்று விட்டது.

பதறிப்போய் புகைப்படக் கருவிவைப் பற்றி பரபரப்புடன் பேசிக்கொண்டிருந்த போது, “ஏழுமலையான் துணை” என்று ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்த ஒரு கார் வந்தது.

எங்களைப் பார்த்து அந்த காரை ஓட்டி வந்த கார் ஓட்டுநர் காரை நிறுத்தி என்ன ஆயிற்று? ஏதாவது உதவி வேண்டுமா? என்று கேட்டார். நாங்கள் நடந்ததைச் சொன்னோம். அதற்கு அவர் கவலைப் படாதீர்கள். அந்த பேருந்து அடுத்த நிறுத்தத்தில் அரை மணி நேரம் நின்று தான் புறப்படும் என்றார்.

என்னுடைய காரில் ஏறுங்கள், அந்த பேருந்தைப் பிடித்து, உங்கள் பையை, எடுத்துக் கொண்டு வரலாம் என்றார். அந்த திருவேங்கடவனே அழைத்து சென்று, அந்த புகைப்படக்கருவியை எங்களுக்கு திருப்பி அளித்ததாக எங்களுக்கு எண்ணத் தோன்றுகிறது. ஏழு மலையான் துணையினால் மட்டுமே எங்களுக்கு அது திரும்ப கிடைத்தது. என்னே திருமலையானின் திருவிளையாடல்!

– திருமதி எம்.ஜி. மாலினி, சேலம்.



# கோடைக்கால மருத்துவம்

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, திருப்பதி.

கோடைக்காலத்தில் அதிக வெப்பத்தினால் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. இப்பிரச்சனைகளிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள பலவிதமான ஆயுர்வேத மருந்துகள் உள்ளன. அதைப்பற்றி அறிந்து கொள்வோம்.

வெயிலில் அதிகமாக வெளியே சுற்றுவதனால் மட்டுமே வெப்பத்தாக்கம் ஏற்படுகின்றது எனக் கருதுகின்றனர். ஆனால் , சூரியனின் மிகுந்த வெப்பத்தினால் வீட்டின் மேற்கூறை, சுவர்கள் கூட வெப்பத்தால் தாக்கப்பட்டு வீட்டின் உள்ளேயும் வெப்பத்தாக்கம் ஏற்படுகிறது.

வெப்பத்தாக்கம் ஏற்பட்டபோது உடல் மிகவும் சூடாக இருக்கும். காய்ச்சல் அதிகமாக இருக்கும். மூளையில் உடல் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் குறைவாக இருக்கும். உடலில் ஆங்காங்கே சிவப்பு நிற தடிப்புகள் ஏற்படும். முகம், கண் சிவப்பு நிறமாகும்.அதிகமாக தாகம் ஏற்படும். தலைவலி, உடம்பு வலி அனைத்தும் தீவிரமாக இருக்கும். சருமம் உலர்ந்து காணப்படும். தலைச்சுற்றல், மயக்கம் போன்றவை ஏற்படும்.

வெப்பத்தாக்கம் ஏற்பட்டபோது துணியை தண்ணீரில் நனைத்து உடம்பின் மீது போர்த்த வேண்டும். பின் துணி உலர உலர குளிர்ந்த நீரைத் தெளிக்க வேண்டும். மேலும் வெங்காயத்தை பஞ்சினால் நனைத்து நெற்றியின் மீது பற்றாகப் போட வேண்டும். அவ்வாறே வெட்டிவேர் இரசத்தையும் மேல் கூறியபடி உபயோகிக்கலாம்.



## வெப்பத்தாக்கத்தை குணமாக்கும் மருந்துகள்



- நாள்தோறும் ஒருமுறை 50 மி.லி. பாலில், நன்னாரி வேரின் பொடியைக் கலந்து நன்கு கொதிக்க வைத்து வடிகட்டி அதனுடன் கற்கண்டு சேர்த்து குடிக்க வேண்டும்.
- 50 மி.லி. பாலில் ஒரு டீஸ்பூன் ரோஸ் வாட்டர் கலந்து குடிக்க வேண்டும்.



- 50 மி.லி. மோரில் 30–50 கிராம் வெங்காயத்தை சிறு துண்டுகளாக்கிப் போட்டு நன்கு கலந்து சாப்பிட வேண்டும்.



- நாள்தோறும் ஓரிரண்டு முறை 100 மி.லி. சூடான நீரில் 2 கிராம் மல்லிப்பொடி, 2 கிராம் பனங்கற்கண்டு ஆகியவற்றை சேர்த்து ஊற வைத்து வடிகட்டி, அந்நீரை அருந்தினால் வெப்பத் தாக்கம் குணமாகும்.





## வெப்பத்தாக்கம் ஏற்படாமல் இருக்க கடைபிடிக்க வேண்டியவை

- நாம் நாள்தோறும் வெளியில் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் காலை 11 மணிக்குள் முடித்துக் கொள்ள வேண்டும். அல்லது மாலை 4 மணிக்குப் பின் நம் வேலைகளைச் செய்து கொள்ள வேண்டும்.
- வெயில் காலங்களில் உப்பு, காரம், மசாலா பொருட்கள் ஆகியவற்றை குறைவாக உட்கொள்வது நல்லது. மண் பானையில் வைத்து இருக்கும் நீர், மோர் ஆகியவற்றை அருந்த வேண்டும். சாத்வீகமான உணவுகள் மற்றும் விரைவில் செறிக்கக்கூடிய பழங்கள் ஆகியவற்றை உண்ண வேண்டும்.
- உடல் வெப்பத்தைக் குறைக்க நீருடன் மோரை அதிகமாக உட்கொள்வது உடம்பில் குளிர்ச்சியை உண்டாக்கும்.
- மோரில் நம் உடலிற்குத் தேவையான பலவிதமான வைட்டமின் மற்றும் சத்துப் பொருட்கள் உண்டாகிறது. மோருடன் உப்பு, எலுமிச்சை, இஞ்சி, கொத்தமல்லித்தழை போன்றவை சேர்த்து அருந்தினால் உடம்பிற்கு மிகவும் ஆரோக்கியமானது.
- அவ்வாறே இளநீர், கரும்பு இரசம், பழரசம் போன்றவற்றையும் உட்கொள்வது மிக நன்று.
- ஏலக்காய், இலவங்கம், பச்சைக் கற்பூரம், மிளகு, கற்கண்டு ஆகியவற்றை நீருடன் சேர்த்து “பானகம்” போன்று தயார் செய்து குடிப்பதால் வெப்பத்தாக்கம் ஏற்படாமல் இருக்கும்.
- நாள்தோறும் சந்தனத்தை அரைத்து ஒரு டீஸ்பூன் அளவு எடுத்துக் கொண்டு நீருடன் கலந்து உட்கொண்டால் வெப்பத்தாக்கம் வராமல் கட்டுப்படுத்தலாம்.
















வீட்டில் இருந்து வெளியே செல்லும் போது வெப்பத்தாக்கம் ஏற்படாமல் இருக்க தலையில் தொப்பி, குடை போன்றவற்றை பயன்படுத்துவது நன்று. கருமை நிற உடைகளை தவிர்த்து வெண்ணிற ஆடைகளை அணிவது வெப்பத்தாக்கத்தை சிறிதளவு குறைக்க உதவும்.கோடைக்காலத்தில் சகமனிதர்களுக்கு ஏற்படும் தாகத்தை தணிக்க மண்குடத்தில் மோர், தண்ணீர் பந்தல் அமைப்பது போன்ற பணிகளில் நாம் ஒருவரோ அல்லது நான்கு, ஐந்து நபர்களுடன் சேர்ந்தோ செய்ய லாம். அதுமட்டுமின்றி வாயில்லா உயிரினங்க ளுக்கும், பறவைகளுக்கும் தாகம் தீர்ப்பதற்கு வீட்டிற்கு வெளியில் தண்ணீர் வைக்கலாம்.

மேற்கூறியவற்றை கடைபிடித்து இந்த கோடைக்காலத்தில் வெப்பத்தாக்கத்தை வெல்ல திருவேங்கடமுடையானை பிரார்த்திப்போம்.




- செல்வி
எம். ஏ. நிவேதா,
அரவக்குறிச்சிப்பட்டி,
9750333265.

எட்டு வயதுச் சிறுவன் சண்முகம் கடை வீதியில் கடைக்காரரிடம் ஒரு ரூபாய் நாணயத்தைக் காட்டி உங்கள் கடையில் இறைவன் இருந்தால் ஒரு ரூபாய்க்குக் கிடைப்பாரா என்று கேட்டான்.

சிறுவனின் கையில் இருந்த நாணயத்தைத் தட்டி விட்ட கடைக்காரர் சிறுவனை அங்கிருந்து துரத்தி விட்டார். சிறுவனும் அந்த நாணயத்தை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு கடையாகச் சென்று ஒரு ரூபாய்க்கு இறைவனை வேண்டுமென்று கேட்டுள்ளான்.

பல கடைக்காரர்கள் அவனை விரட்டி விட்டாலும் மனம் தளராத சிறுவன் சண்முகம் அங்கிருந்த ஒரு பெரிய கடைக்குச் சென்று, உங்கள் கடையில் இறைவன் இருந்தால் ஒரு ரூபாய்க்கு வேண்டுமென்று கேட்டு உள்ளான். அதற்குக் கடைக்காரர் ஒரு ரூபாய்க்கு இறைவனை வாங்கிவிட்டு அந்த இறைவனை வைத்து என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டுள்ளார்.

அதற்கு சிறுவன் எனக்கு எல்லாமே என் தாய் தான். சாப்பாடு ஊட்டுவது முதல் தாலாட்டுப் பாடி என்னைத் தூங்க வைப்பது வரை என் தாய் தான். தற்போது அவர் உடல் நலம் சரி இல்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். மருத்துவர்கள் உன் தாயை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறி விட்டனர். அதனால்தான் என்னிடம் உள்ள ஒரு ரூபாய்க்கு இறைவன் கிடைப்பாரா என்று தேடிக் கொண்டிருக்கிறேன் என்று கூறினான். அதற்கு அக்கடைக்காரர் உனக்கு ஒரு ரூபாய்க்கு இறைவன்தானே வேண்டும் நான் தருகிறேன் என்று கூறி, அவனை உள்ளே அழைத்து "ஓம் நமோ நாராயணாய..." என சொல்லிக் கொண்டே அவனிடம் ஒரு சிறிய பாத்திரத்தில் சுத்தமான தண்ணீர் கொடுத்தார்.இதை உன் தாயிடம் குடிப்பதற்கு கொடு, ஸ்ரீமந்நாராயணன் அருளால் உன் தாய் குணமாவார் என்று கூறி அனுப்பி வைத்தார். மறுநாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தாயை சிறப்பு மருத்துவர்கள் வந்து அறுவை சிகிச்சை செய்தனர். சிறுவனின் தாய்க்கு உயர்தர சிகிச்சைகள் அளிக்கப் பட்டது.




தாயும் உயிர் பிழைத்தார். அவரிடம் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் சிகிச்சைக்கான பில் காட்டினார்கள். தனக்கு சிகிச்சை செய்த செலவுத்தொகையைக் கண்ட அந்த ஏழைத்தாய் அதிர்ந்து போனார். ஆனால், மருத்துவர்கள் அந்த ஏழைத் தாயிடம் கவலைப் படாதீர்கள். உங்கள் சிகிச்சைக்கான அனைத்துத் தொகையும் ஒருவர் மருத்துவமனையில் செலுத்தி விட்டார். அவரே உங்களிடம் கொடுக்கச் சொல்லி ஒரு கடிதத்தையும் கொடுத்துள்ளார் என்று கூறி, அந்தக் கடிதத்தை அத்தாயிடம் கொடுத்தனர். அதை வாங்கிப் படித்தார். அக்கடிதத்தில் "நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது எனக்கு அல்ல. நான் ஒரு நிமித்தம் (கருவி) மட்டுமே. ஆனால், ஒரு ரூபாய்க்கு இறைவன் வேண்டுமென்று கடைவீதியில் நம்பிக்கையோடு அலைந்த உங்கள் அப்பாவி மகன் சண்முகத்திற்குத்தான் நன்றி கூற வேண்டும்'' என்று கூறியிருந்தார்.



# ஏப்ரல் 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

சுபச்செலவுகளுக்கு ஏற்ற வருமானம் உண்டு. உடல் உஷ்ணம் அடையும். தொழில் வளர்ச்சி உண்டு. உத்தி யோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. கணவன்–மனைவி நல்லுறவு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். தனலாபம் உண்டு. கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. தங்கம், வெள்ளி நகைகள் வாங்கும் யோகம் உண்டு

**ரிஷபம்**

நினைத்த காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். சகோதர வழியில் தனலாபம் உண்டு. தொழில் துறையில் விஸ்தரிப்பு செய்யலாம். பழைய பாக்கிகள் வசூலாகும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குழந்தைகளால் செலவினங்கள் உண்டு. மாணவர்கள் மிகுந்த கருத்துடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். பெண்களுக்கு ஏற்றம் தரும் மாதமிது.

**மிதுனம்**

ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. தொழில் துறையில் மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். கல்விக்காகச் செலவினங்கள் அதிகமாகும். பூர்வ புண்ணிய சொத்துக்களைப் பற்றி இம்மாதம் பேசாமல் இருப்பது நல்லது. தோஷ பரிகாரங்களைச் செய்வதற்கு ஏற்ற மாதமிது. தாய் தந்தையரின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

**கடகம்**

எடுத்த காரியங்கள் தாமதமாகும். குழந்தைகளால் செலவினங்கள் அதிகமாகும். ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. தொழில் துறையில் அலைச்சல் மிக அதிகமாகும். சிலருக்குத் தொழில் துறையில் இடமாற்றம் உண்டு. தந்தையின் ஆலோசனை பேருதவியாக இருக்கும். கணவன்–மனைவிக்குள் சிறு சிறு கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும்.

**சிம்மம்**

ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் படிப்படியாகக் குறையும். திருஷ்டி அதிகம் உண்டு. உங்கள் செயல்பாடுகளை வெளியாட்களிடம் கூறினால் திருஷ்டியினால் காரியங்கள் தடைபடும். ஆஞ்சநேயருக்கு நல்லெண்ணெய் தீபம் சனிக்கிழமைகளில் ஏற்றுவது திருஷ்டியைப் போக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். பிரச்சனைகள் நீங்கும் மாதமிது

**கன்னி**

அலைச்சல் மிக அதிகமாகும். வேலைக்கேற்ற வருமானம் கிடைப்பதில் சிக்கல் உண்டு. மற்றவர்கள் உடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவுகள் உண்டாகும். சிலருக்குத் தொழில் செய்யுமிடமோ குடியிருக்கும் இடமோ இடமாற்றம் செய்ய வேண்டி இருக்கும். தொழில் போட்டிகளில் கஷ்டப்பட்டு வெற்றியும் அடைவீர்கள். பொதுவாக நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**துலாம்**

தொழில் துறையில் விருத்தி நீங்கும். தொழில் செய்யுமிடத்தில் வேலைக்கேற்ற வருமானம் உண்டு. குழந்தைகள் நல்ல ஆரோக்யமும் முன்னேற்றமும் அடைவார்கள். நண்பர்கள், உறவினர்களின் ஆதரவும் கிடைக்கும். மன அழுத்தம் குறையும். பூர்வ புண்ணிய சொத்துக்களால் இருந்த பிரச்சனைகள் குறையும். மனக்குழப்பங்கள் தீர்ந்து விருத்தி பெறும் மாதமிது.

**விருச்சிகம்**

ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. தாய்க்கு மூட்டு வலிகள் உண்டாகும். தந்தையின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள், உறவினர்களால் பிரச்சனைகள் உண்டாகும். பூர்வ புண்ணிய சொத்துக்களைப் பற்றிச் சிலகாலம் பேசாமல் இருப்பது நல்லது. அலைச்சல் ஏற்படும்

**தனசு**

ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். சகோதரர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவர். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும்.வெகு நாட்களாகக் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு மருத்துவ உதவியின் பேரில் கரு உற்பத்தியாகும். பல விதத்திலும் இருந்த பிரச்சனைகள் தீர்ந்து நன்மை பெறும் மாதமிது.

**மகரம்**

ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். தனக்குக் கீழ் பணி புரியும் பணியாளர்களால் முன்னேற்றம் உண்டு. தொழில் துறையில் வேலைப்பளு அதிகமாகும். தாராளப் பணப்புழக்கம் உண்டாகும். உறவினர்கள் மற்றும் குடும்பத்தில் இருந்த பல பிரச்சனைகளும் நீங்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

**கும்பம்**

பிடிவாதமாகக் காரியங்களைச் செய்து சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பெற்றோரின் ஆரோக்யம் நன்றாக இருக் கும். யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். ஆரோக் யத்தில் குறைபாடுகள் நீங்கும். வேலைக்கேற்ற வருமானம் உண்டு. மனைவி–குழந்தைகளால் சந்தோஷம் உண்டு. எல்லா காரியங்களிலும் இரண்டாவது முயற்சியில் வெற்றி உண்டு.

**மீனம்**

செலவிற்கேற்ற வருமானம் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். விவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. நண்பர், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. எல்லா காரியங்களிலும் இரண்டாவது முயற்சி வெற்றி தரும்.

पाठः त्रयोविंशः

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

பாடம்-23

बालकस्य = சிறுவனுடையது, சிறுவனது, சிறுவனுக்கு; कुतः = எதற்காக, எதனால்; बालकानाम् = சிறுவர்களுடையது, சிறுவர்களது, சிறுவர்களுடன்; दन्तः = பல்; ततः = அதற்காக; अतः = இதற்காக;

प्रार्थनाद्यर्थकम् = ப்ரார்த்தனைக்கு முன்

प्र. खादतु = खादन्तु படர்க்கை
म. खाद = खादत முன்னிலை
उ. खादामि = खादाम தன்மை

## வினாக்கள்

1. बालकस्य दन्ताः नासन्।
2. एते बालकाः अन्नं खादन्तु।
3. त्वमपि झटिति स्नानं कृत्वाऽन्नं खाद।
4. अद्य ममान्नं मास्तु।
5. तर्हि किं खादिष्यसि।
6. फलानि खादिष्यामि।
7. युष्मद्गृहे फलानि सन्ति वा?
8. अनेकफलानि सन्ति।
9. बालकस्य जनकः भोजनम् अकरोद्वा न वा?
10. सः इदानीम् अस्मद्गृहस्य आरात् देवस्य नमस्कारान् करोति।

1. எனக்குப் பற்கள் இல்லை.
2. அதனால் பழங்களைத் தின்னமாட்டேன்.
3. அந்த வீடுகள் யாருடையது?
4. அந்த வீடுகள் எங்களுடையதே.
5. எங்கள் வீடுகள் அருகிலேயே உள்ளன.
6. அந்தக் கட்டிலின் மேல் யார் இருக்கிறார்கள்?
7. அந்தச் சிறுவனுடைய அண்ணன்.
8. இந்தப் பழத்தை அவன் தின்னட்டும்.
9. அந்தப் பழத்தை நீங்கள் தின்னுங்கள்.
10. இல்லையானால் அந்தப் பழங்களை நாங்கள் தின்னுவோமாக.

## விடைகள்

1. சிறுவனுக்குப் பற்கள் இல்லை.
2. இந்த சிறுவர்கள் அன்னம் (சாதம்) சாப்பிடட்டும்.
3. நீயும் உடனே குளித்து விட்டு அன்னம் சாப்பிடு.
4. இன்று எனக்கு அன்னம் வேண்டாம்.
5. அப்படியானால் என்ன தின்பாய்?
6. பழங்கள் தின்பேன்.
7. உங்கள் வீட்டில் பழங்கள் இருக்கின்றனவா?
8. நிறைய பழங்கள் இருக்கின்றன.
9. சிறுவனின் தந்தை சாப்பிட்டாரா? இல்லையா?
10. அவர் இப்போது எங்கள் வீட்டிலிருந்து வந்து கடவுளுக்கு வணக்கம் செலுத்திக் கொண்டு இருக்கிறார்.

1. मम दन्ताः न सन्ति?
2. तदर्थं फलानि न खादामि।
3. तानि गृहाणि केषाम्।
4. तानि गृहाणि अस्माकमेव।
5. अस्माकं गृहाणि सविधे एव सन्ति।
6. तस्मिन् मञ्चे के सन्ति?
7. तस्य बालकस्य अग्रजः।
8. इदं फलं सः खादतु।
9. तत् फलं यूयं खादन्तु।
10. नोचेत् तानि फलानि वयं खादामः।


தெலுங்கு மூலம் : மகாமஹோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமஹோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

## பல் சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

1. திருவாதிரை - அ.கேரளா வருடப்பிறப்பு
2. சித்திரை - ஆ.தமிழ் வருடப்பிறப்பு
3. விஷு - இ. திருவாதிரை
4. ஆதிசங்கரர் - ஈ. இராமானுஜர்
5. சித்திரை 01 - உ.மதுரகவி ஆழ்வார்

1.ஈ, 2.உ, 3.அ, 4.இ, 5.ஆ.

### சுலோகம் அறிவோம்!



என்னைப் புவியி லொருபொரு ளாக்கி
மருள் சுரந்த
முன்னைப் பழவினை வேரறுத் தூழி
முதல்வனையே
பன்னப் பணித்த இராமாநுசன் பரன்
பாதமுமென்
சென்னித் தரிக்க வைத்தான்
எனக்கேதும் சிதை வில்லையே


(இராமாநுஜ நூற்றந்தாதி-4)

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

சித்திரை மாதம் தமிழர்களின் கொண்டாடப்படுகிறது புத்தாண்டாகக் முதல் நாள்.

சித்திரை மாதம் முதல் நாள் தமிழர்களின் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது.

### பாதையைக் கண்டுபிடி



கங்கை நதி பாயும் இரு வழிகளில், எந்த வழியில் வரும் கங்கை தாய்க்கு இந்த பெண்மணி ஆரத்தி அளிக்க இயலும். பாதையைக் குறித்திடுங்கள்.

### விடுகதை பகுதி...

1. காலில்லாதவன் ஓடுவான் அவன் யார்?
2. இளமையில் உயரமாகவும் முதுமையில் குள்ளமாகவும் மாறுவான் அவன் யார்?
3. உயரத்தில் பிறப்பான்; தாகத்தைத் தீர்ப்பான்அவன் யார்?

1) பாம்பு, 2) மெழுகுவர்த்தி, 3) இளநீர்.

# வி னா டி வி னா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி போட்டி எண்-9

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. ஆதிசங்கராசாரியரின் பெற்றோர் பெயர் ................................................
2. ஆகாய கங்கையை பூமிக்கு கொண்டு வந்தவர் ................................................
3. திருமாலையாண்டான் அவதரித்த நட்சத்திரம் ................................................
4. சூத மகரிஷியிடம் சனாதன தர்மத்தை குறித்து கேட்டு அறிந்தவர்கள் ................................................
5. மகாவிஷ்ணுவின் மூன்றாவது அவதாரம் ................................................
6. ஜ்ஞானபூர்ணர் எனும் திருநாமம் கொண்ட ஆசார்யர் ................................................
7. அத்திகிரி திவ்யதேசம் அமைந்துள்ள ஊர் ................................................
8. காஞ்சியில் வேகவதி என்ற பெயரில் நதியாக அவதாரமெடுத்தவர் ................................................
9. நம்மாழ்வாரின் திருவாய்மொழி எதன் சாரம் என்பர் ................................................
10. திருவேங்கடம் அடை நெஞ்சமே எனப் பாசுரமிட்டவர் ................................................
11. துருபதனின் மகன் பெயர் ................................................
12. இராமாநுஜருக்கு திருக்கோட்டியூர் நம்பி இட்ட பெயர் ................................................
13. தேவராஜ மங்களம் என்ற ஸ்தோத்திர நூலை அருளியவர் ................................................
14. காஞ்சி வரதன் சன்னதியில் பல்லிகளாக இருப்போரின் பெயர் ................................................
15. யுதிஷ்டிரர் அக்ஷய பாத்திரம் பெற்ற தினம் ................................................



### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.04.2023.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

# இதில் பொருந்தாதது எது?



..............................



..............................



..............................



..............................

குறிப்பு : ஸ்ரீசீதாராம திருக்கல்யாணம், கங்கை கரையில் அமைந்துள்ள ஆலயங்கள், அக்ஷய திருதியை, கோடைக்கால பழங்களுக்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்





1) மேகம்
2) மலை
3) முனிவரின் அங்க வஸ்திரம்
4) குன்றுகள்
5) தாமரை
6) புல்வெளி
7) தண்ணீர் செல்லும் பாதை

# பகீரதனின் விடா முயற்சி

சித்திரக் கதை

*கதை மூலம் :டாக்டர் கே. ரவிச்சந்திரன்.*
*சித்திரம் :திரு. சிவாஜி.*




பகீரதன் தன் கால் பெருவிரலால் நின்று வாயுவை உணவாகக் கொண்டு ஒரு வருட காலம் சிவபெருமானை நோக்கி தவம் புரிந்தான்.
பகீரதா! உன் கோரிக்கையை நிறைவேற்றுகிறேன். கங்கையை என் தலை மீது ஏற்கிறேன்.
பரமசிவன் இமாலயத்தில் பிந்து சரோவரம் அருகில் நின்று கங்கையைப் பாய வைத்தார். கங்கை இங்கு ஏழு நதிகளாகப் பாய்ந்தது. அதில் ஒன்று பகீரதனை பின் தொடர்ந்துச் சென்றது.
கங்கை ஜஹ்னு மகரிஷி ஆசிரமத்தை மூழ்கடித்துப் பாய்ந்தது. கோபம் கொண்ட மகரிஷி கங்கையை விழுங்கினார்.
மகரிஷி நான் என் மூதாதையர்களுக்கு மோட்சம் அளிப்பதற்காக கங்கையை அழைத்து வந்துள்ளேன். இவ்வளவு தூரம் வந்த கங்கையை தாங்கள் விழுங்கி விட்டீர்கள். எனக்கு கருணைக் காட்டி கங்கையை விடுவியுங்கள்.
மகரிஷி கங்கையை விடுவித்தார். கங்கையும் பகீரதனுடன் பாதாள லோகம் சென்று பஸ்பமாய் இருந்த பகீரதனின் மூதாதையர்கள் 66 ஆயிரம் பேர் மீதும் பாய்ந்தோடியது.
அனைத்து பாவங்களையும் போக்கக்கூடிய கங்கையின் அலைகள் பட்டு 66 ஆயிரம் பேரும் சாபவிமோசனம் பெற்று நற்கதியை அடைந்தனர்.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:
இடம் :
நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

2023, பிப்ரவரி 13 முதல் 16 வரை திருப்பதியில் தி.தி.தே. எஸ்.வி. பாரம்பரிய சிற்பம் மற்றும் கட்டிடக்கலை கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சிற்பங்கள் மற்றும் ஓவியங்களை பார்வையிடும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். (எச்.&இ.) அவர்கள்









2023, பிப்ரவரி 11 முதல் 13 வரை திருப்பதி மஹதி கலையரங்கத்தில் தி.தி.தே. ஆடவர் ஊழியர்களுக்கான சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சியினை குத்துவிளக்கேற்றி வைத்து மருத்துவக்குறிப்புகள் அடங்கிய கையடக்க புத்தகத்தை வெளியிட்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ. வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ்.அவர்கள், தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். (எச்.&இ.) அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்










SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-03-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

